# பூவரசு

Poovarasu




பங்குனி-சித்திரை 1993

வாசித்தீர்களா?

உங்கள் அபிமான நாவலாசிரியர்
இந்துமகேஷ்
எழுதிய

## மேனியைக்கொல்வாய்.

(நெடுங்கதை)



இது ஒரு
பூவரசு வாசகர்வட்ட
வெளியீடு!

விரைவில் வெளிவருகிறது!

இந்துமகேஷ்
எழுதிய குறுநாவல்

## ஒன்று+ஒன்று=ஒன்று.

தனிநூல்வடிவில்.



ஒன்று+ஒன்று=
ஒன்று.

உலகமே நம் இல்லம்;
உள்ளமெல்லாம் நம் சொந்தம்

# பூவரசு

POOVARASU.

## இனிய தமிழ் ஏடு
## இரு திங்கள் ஒன்று.

இதழ்:14

பங்குனி-சித்திரை 1993

*படைப்பவர் ஆக்கம் தருக*
*படிப்பவர் ஊக்கம் தருக.*

Poovarasu
Sinniah Maheswaran
Neuwieder Str.32
2800 Bremen 41
Germany.

இனிய தமிழ் ஏடு

விமர்சன மலர்கள்!

பூவரசு இனிய தமிழ் ஏடு பதின்மூன்றாவது மலர் கருத்துக்கு நிறைவாகவும் கண்களுக்கு விருந்தாகவும் கரங்களுக்கு கனமாகவும் அமைந்திருந்தது.

''இலையுதிர்த்து மரங்களெல்லாம்
துயில்கொள்ளும் குளிர்காலம்
பூவரசே! உனக்குமட்டும்
எந்நாளுமே வசந்தம்!''

ஜெகதீஸ்வரியின் இந்தக் கவிதை வரிகளில்தான் எத்தனை நிதர்சனம்.

கடவுளா?இருக்கிறாரா?எங்கே? என வெளிநாட்டில் தடுமாறும் எம்மவர்க்கு ''பரம்பொருளைத்தேடி''க் காட்டி ஆன்மீகதுறையிலும் வழிகாட்டியது வரவேற்கவேண்டியதே! இதுபோன்ற ஆக்கங்கள் தொடரவேண்டுகிறேன். வீ.ஆர்.வரதராஜா அவர்கள் தன் செலவிலேயே பூவரசு வாசகர்களுக்குத் தமிழ்நாட்டைச்சுற்றிக்காட்டும் நேர்த்தியே நேர்த்தி.

தன் கைவண்ணத்தால் எம் கண்களுக்கு விருந்தளித்த ஓவியர் அருணின் திறமையை பாராட்டாமல் விடமுடியாது. பூவரசின் வளர்ச்சிக்கு வாசகர்கள் மட்டுமல்ல கண்ணையும் கருத்தையும் கவரும் சித்திரங்களை தீட்டிய அருணின் பங்கும் உண்டல்லவா?

இருமாதங்களுக்கு ஒரு ஏடாக இரண்டுவயதுவரை தவழ்ந்துவந்த பூவரசு இனி மாதமொரு ஏடாக தளிர்நடைபோட்டு வாசகரைநாடி வரவேண்டுமென ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

–கனடாவிலிருந்து கௌரி கணா.

அழகிய வண்ண நிறத்துடன்
அதிக கிளைகொண்டு
இரண்டாண்டுதனையும் தாண்டி
மூன்றாவதாண்டை நோக்கி
ஒங்கிவளரும் பூவரசே
நீ வாழ்க...வளர்க!
பூத்த அந்தப்பூவரசில்
பார்த்தவை அனைத்தும்
வாடா மலர்கள்!
வளமிக்க பூவரசே
வாழியவே பல்லாண்டு.
இரு திங்கள் கொண்டு
இனிய பூவரசு
இனி ஒரு மாதம் கொண்டு
வருவதென்றாலும் மகிழ்ச்சியே.
வரவேண்டும் நீ
நீடூழி செழித்து நிற்கவேண்டும்.

–நெதர்லாந்திலிருந்து க.ஸ்ரீதாஸ்.

அன்பான என் தமிழ்ப் பூவரசே!
அன்று எங்கள் வீடுகள்தோறும்
நிழல் கொடுத்தாய்!
இன்று நாடுகள்தோறும் சென்று
நறுமணம் வீசிடும் உனக்கு
வயது இரண்டு
குழந்தைபோல் தவழ்ந்துவந்து
எங்கள் மனங்களிலே இடம்பிடித்தாய்
இருதிங்கள் ஒன்றென நீ மலர்ந்து
மறந்தவர் மனங்களிலும்
நிழல் கொடுப்பாய்!
என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.
–நூறன்பேர்க்கிலிருந்து க.சின்னத்துரை.

இனிய தமிழ் ஏடு

# முதற்பரிசுக் கவிதை;

மண்மீட்க வா என் மனமே!
பொன் அள்ளி அணிவதிலும்
பொருள்சேர்த்துக் குவிப்பதிலும்
எந்நாளும் கிடைப்பதில்லை
நிலையான சுகமே!

தாய்மண்ணை மறப்பதா
தன்மானம் இழப்பதா
பார்முழுதும் ஓடவா
பரிதாபம் அல்லவா?
மண்மீட்க வா என் மனமே!

உன் நாட்டில் உரிமைக்காய்
புனிதப்போர் நடக்கிறது
ஈழத் தமிழ்நாடு
இரத்தத்தில் மிதக்கிறது
நாலுபக்கம் இராணுவம்
முற்றுகை இடுகிறது
காலமது காணாத
படுகொலைகள் நடக்கிறது
ஏன் கண்டுகொள்ள மறுக்கிறாய்
கல்லாகக்கிடக்கிறாய்
உண்டுடுத்து உறங்குவதில்
உன்னைநீ மறக்கிறாய்

சுதந்திரத்தை வென்றெடுக்கும்
வேட்கையின்றி இங்கிருந்துநீ
சுதந்திர நினைவு நிலைக்குமா?
அந்நியர்கள் ஆளவந்து
எங்களினம் வாழ்விழந்து
அங்குமிங்கும் ஓடி ஓடி ஒளிப்பதா
பொன்கொழிக்கும் ஈழ பூமி
எங்களிற்குச் சொந்தமென்று
போர்க்களம் புறப்படத்தயக்கமா?
இங்கிவரும் இருந்தொருநாள்
எங்களைத்துரத்தும்போது
தங்குதற்கு நிழல்கூட இருக்குமா?
இது தமிழர்விதி என்றிருக்க முடியுமா?

மந்திரத்தில் காய்த்துவிடும்
மாங்காய் அல்ல இது
தந்திரத்தில் வடைபறித்த
நரியின்கதை அல்ல
சுதந்திரத்தை வென்றெடுக்க
உயிர்கொடுக்கவேண்டும்
வரும் இடர்கள் தாங்கிவாழத்
திடம் இருக்கவேண்டும்
பொருள்படைத்த அடிமைவாழ்வில்
நிறைவிருப்பதில்லை
சுதந்திரத்தைப்போல் எதிலும்
சுகம்கிடைப்பதில்லை,
சுயநலத்தைக்கொன்றுவிட்டு
இனமான உணர்வோடு
மண்மீட்க வா எந்தன் மனமே!

விண்சென்று மறைந்த வீரர்களின்
விழிகொண்ட வெப்பமும்
பொன்செய்த அவர் உள்ளம்
பொருத்திய வேட்கையும்
போர்புரிந்த அவர்கைகள்
ஏந்திய ஆயுதமும்
முன்னின்று அழைக்கிறது
முகத்தை ஏன் மறைக்கிறாய்?
பெண்ணென்று தயக்கமா
பேதங்கள் விட்டிடம்மா
அடிமை விலங்குடைக்க ஆணும்
பெண்ணும் சமமல்லவா
கடமைதனைக் கையிலெடு
மடமைகளைக்கொழுத்திவிட்டு
மண்மீட்க வா என்மனமே!

-ஜெகதீஸ்வரி ராஜரட்ணம்.

மண்மீட்க வா என் மனமே!

எஸ்.கந்தசாமி.

* செக்கோசிலோவக்கியா ஜனவரி 1ம் திகதிமுதல் செக்நாடு சிலோவக்காடு என இருபிரிவுகளாகப் பிரிவுற்றது. அமைதியான முறையில் இரு நாடுகளும் தனிநாடுகளாகப் பிரிவுற்றபோதும் எதிர்காலத்தில் இருநாடுகளிடையேயும் சில பிரச்சினைகள் தோன்றும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. தொழில்வளர்ச்சி பொருளாதாரநிலைகளில் பின் தங்கியுள்ள சிலோவக் நாட்டில்வாழும் சிறுபான்மையினரான 6 லட்சம் ஹங்கேரியர்களின் நிலை மோசமடைந்து வருகிறது. ஹங்கேரி மொழியில் இதுவரைகாலமும் நடைபெற்ற தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் தடை செய்யப்பட்டதுடன் ஹங்கேரிய மொழியில் அமைந்த பெயர்ப்பலகைகளும் அகற்றப்பட்டுவருகின்றன. அதேபோன்று செக்நாட்டில் தீவிர வலது, இடது சாரிகளின் வளர்ச்சியும் அதிகரித்துவருகின்றது. கடந்த டிசம்பர்மாதம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரைக்கொலை செய்ய முயற்சி நடைபெற்றது. ஜிப்ஸிகளுக்கெதிரான வன்செயல்களும் அதிகரித்துவருகின்றன. செக்நாட்டிலுள்ள எஸ்.பி.டி. கட்சியின் தலைவர் அதிகரித்துவரும் குற்றச்செயல்களுக்கு வெளிநாட்டவர்கள்மீது குற்றம் சுட்டியுள்ளார். செக் நாட்டில் 10.3 மில்லியன் மக்களும், சிலோவக் நாட்டில் 5.3 மில்லியன் மக்களும் வாழ்கின்றனர்.

* 1986ம் ஆண்டு இஸ்ரேலில் அமுல் செய்யப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தடைசெய்யும் சட்டமூலம் மீளப்பெறப்பட்டுள்ளது. மேற்படி விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் இஸ்ரேலியர்கள் 3வருட காலம்வரை சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டிவரும் என்று 1986ம் ஆண்டில் இஸ்ரேலிய சட்டமொன்று அமுல் செய்யப்பட்டது. தொழிற்கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒரு அம்சம் இது. இதன்மூலம் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படலாம் எனக்கருதப்படுகிறது. பலஸ்தீன விடுதலை இயக்கமும் மேற்படி நடவடிக்கையை வரவேற்றுள்ளது.

* வியட்னாமும் தென்கொரியாவும் ராஜதந்திர வர்த்தகத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. பல ஆண்டுகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வியட்னாமுக்கு சென்ற ஆண்டு ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகிறது. 30 ஆண்டுகாலமாக வர்த்தகத் தடைகளை விதித்துவந்த அமெரிக்கா அவைகளைத் தளர்த்திவருவதுடன் ஜப்பானும் நிதியுதவிகளை ஆரம்பித்தது. தென்கொரியாவுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொண்டதோடல்லாமல் சீனாவுடனும் ரஷ்யாவுடனும் கூட வியட்னாம் உறவுகளை ஏற்படுத்திக்கொண்டது.

* மார்ச் மாதம் 93ம் ஆண்டு நடைபெறவுள்ள பிரான்சின் பாராளுமன்றத் தேர்தல்களில் ஜனாதிபதி மித்ரான்டின் சோஷலிஸ்ட்கட்சி தோல்வியடையும் எனக்கருதப்படுகிறது. அண்மையில் பெறப்பட்ட கணிப்புக்களின்படி சோஷலிஸ்ட்கட்சி 20வீத வாக்குகளையும் எதிர்க்கட்சிகளான ஆர்.பி.ஆரும், யு.டி.எவ்வும் இணைந்து 43.5வீத வாக்குகளையும் பெறும் எனத்தெரிகிறது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் சார்பில் ஒருவர் பிரதமராக வந்தாலும் தனது பதவிக் காலம் 1995ல் முடியும்வரை 76வயதான ஜனாதிபதி மித்ரான்டே ஜனாதிபதி பதவியில் இருப்பார் எனவும் தெரிகிறது.

* ஜனாதிபதி புஷ் தனது பதவியின் இறுதிநாட்களில் 26,700 கி.மீ. வரை பயணம் செய்து சாதனைபடைத்துள்ளார். சோமாலியா சென்று அமெரிக்கப்படையினருடன் புதுவருடத்தைக் கழித்துவிட்டு ரஷ்யா சென்று ரஷ்ய ஜனாதிபதியுடன் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதக்குறைப்பு ஒப்பந்தமொன்றைச்செய்துவிட்டு அமெரிக்காதிரும்பும் வழியில் பிரான்ஸ் சென்று ஜனாதிபதி மித்ரான்டுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

* இந்தியாவில் இராமர் பிறந்த இடம் எனக்கருதப்படும் அயோத்தியில் 1528ம் ஆண்டு கட்டப்பட்ட மசூதியை இராமருக்குக் கோயில்கட்டுமுகமாக தீவிரவாத இந்துக்கள் தகர்த்ததை அடுத்து ஏற்பட்ட கலவரங்களில் 1100 பேருக்குமேல் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள் எனவும் பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானோரே அதிகம் எனவும் அறியப்படுகிறது. 1984ம் ஆண்டு இந்திராகாந்தி கொலையைத் தொடர்ந்து இடம்பெற்ற மோசமான கலவரங்களை அடுத்து அதிகசேதங்களை இம்முறை கலவரங்கள் ஏற்படுத்தியுள்ளன எனவும் தெரிகிறது. இந்தியாவின் 900 மில்லியன் மக்களில் 83 வீதமானோர் இந்துக்களாவர். 1947ம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியா, இந்தியா–பாகிஸ்தான் என இருநாடுகளாகப் பிளவுபட்டதை அடுத்து 4 மாதங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற இந்து–முஸ்லீம் கலவரங்களில் 5 லட்சத்துக்கும் 10 லட்சத்துக்கும் இடைப்பட்டோர் கொல்லப்பட்டனர்.

* முன்னாள் யூகோசிலவியாவின் சேர்பியா நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் ஸ்லோபோடன் மிலோசெவிக் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 55 வீதமான வாக்குகளைப்பெற்ற இவர் தன்னை எதிர்த்துப்போட்டியிட்ட சேர்பியாவின் பிரதமரான மிலான் பனிக் என்பவரைத்தோற்கடித்தார்.

* கென்யாவின் ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் டானியல் அரப்மொய் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 26 ஆண்டுகளின்பின் முதன்முறையாக பல அரசியல் கட்சிகளும் பங்குபற்றிய தேர்தல் இதுவாகும்.


* அங்கோலாவில் அரச படைகளுக்கும் ஜோனாஸ் சவிம்பியின் யூனிட்டா இயக்கத்துக்கும் இடையே மீண்டும் சண்டைகள் ஆரம்பமாகியுள்ளன. 1000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

* ஜேர்மனியின் கூட்டரசில் அங்கம் வகிக்கும் எவ்.டி.பி கட்சியை சேர்ந்தவரும் ஜேர்மனியின் பொருளாதார அமைச்சருமான ஜீகென் முலெமன் ராஜினாமாச் செய்துள்ளார். இவர் தனது பதவியை தனது உறவினர் ஒருவருக்கு சலுகைகள் செய்வதற்குப் பயன்படுத்தியதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் நிருபணமாகியதை அடுத்து ராஜினாமாச்செய்த இவர் உதவிக் கான்சிலராகவும் பதவிவகித்தார் என்பது குறிப்பிடத் தக்கது. கடந்த 9 மாதங்களில் ஜேர்மன் அரசின் 4 அமைச்சர்கள் ராஜினாமாச் செய்துள்ளனர்.

# என்ன நடக்கிறது?

''தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
இறுதியில் தர்மமே வெல்லும்!''

–பாரதத்தில் பிறந்த மகாபாரதம் புகட்டும் படிப்பினை இது. கிட்டுவின் மரணத்திற்குக் காரணமானவர்கள் இதனை நினைவில் கொள்வது மிக முக்கியம். தர்மம் இட்ட கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்ட பல்லாயிரம் ''பாண்டவரில்'' கிட்டுவும் மிக முக்கிய பங்கு வகித்தவர். அவரின் மரணம் தமிழ்கூறும் நல்லுலகையே பெரும் சோகத்தில் ஆழ்த்திவிட்டது. ஒவ்வொருவரும் தமது உடன்பிறப்பொன்றை இழந்துவிட்ட துன்பத்தில் துவண்டுபோயுள்ளனர். அதர்மத்தின் கொடுமைகளால் அல்லல்படும் தமிழ் ஈழத்தவர் விடுதலைப் போராட்டத்தை விரும்பி ஏற்றவர்களல்ல. அறவழிப்போராட்டம் தோல்விகண்டதனால் தர்மத்தை நிலைநாட்டவும் இழந்தநாட்டை மீட்கவும் போரில் குதிக்கும் நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்டது. நமது இனம் விடுதலை அடையும் நாள் வெகுதொலைவில் இல்லை.இந்த இன விடுதலைப் போராட்டத்தில் கிட்டு என்ற கிருஷ்ணகுமாரின் பங்கு மிகமிக அளப்பரியது. தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற தமிழின விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் அவரும் ஒருவர். யாழ்மாவட்ட தளபதியாக அவர் ஆற்றிய சேவை இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.ஆயுத பலமிக்க ஸ்ரீலங்கா இராணுவத்தையே தடுத்துநிறுத்தும் பலம் எம்மிடையே உண்டு என்ற உறுதியை முதலில் ஏற்படுத்தியவர் அவர். தமிழினமக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்குமாறு வெளிநாடுகளில் அவர்செய்த பிரச்சாரம் எதிர்பாராத வெற்றியினை அளித்துள்ளது. பல்வேறு திட்டங்களை செயற்படுத்தும் நிலையில் தமிழ் ஈழத்துக்குச் சென்றுகொண்டிருந்த கிட்டு அகால மரணமானார். இந்திய கடற் படையினரால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் ஜனவரி 13ம் திகதி கைது செய்யப்பட்டது. அவர்களிடம் சரணடைய விரும்பாத கிட்டுவும் மற்றும் குட்டி ஸ்ரீ,வேலன், நாயகன்,றொசான், ஜீவா,குணசீலன்,தூயவன், நல்லவன்,அமுதன் ஆகியோர் ஜனவரி 16ம் திகதி தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டனர். தளபதி கிட்டுவுக்கும் ஏனைய ஒன்பது வீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகிறோம். போராளிகள் புதைக்கப்படுவதில்லை. விதைக்கப்படுகிறார்கள். பலமானவர்களைப் பலியாக்கினால் போராட்டம் பின்தள்ளப்படும் என்று நினைக்கிறார்கள் போலும்! தமிழீழ தர்மப்போராட்டம் தொடராவே அவர்கள் உயிரை விட்டார்கள் என்பதை யாவரும் புரிந்துகொள்ளவேண்டும்.



–வீ.ஆர்.வரதராஜா.

## சங்கு முழங்குது...சங்கு முழங்குது
## சங்கு முழங்கிடும் செய்தியைக்கேளடா!

எங்கும் தமிழர் அகதியாயினர்
தங்கள் மண்ணிலும் அடிமையாயினர்
இந்நிலையைக் கண்டதுமிளைஞர்
பொங்கி எழுந்தனர் பொலிந்தனர்...படையாய்.


அங்கோ எங்கள் உறவுகள் அழியுது
இங்கோ நாங்கள் உண்டு களிக்கிறோம்
சிந்தையில் எந்தச் சுரணையும் இன்றி
சந்தைப்படுத்தினோம் எங்கள் வியர்வையை.

எந்தையும் தாயும் குலவிய நாட்டில்
தந்தையும் தாயும் கொடுமையில் உழல
இன்னும் எமக்குத் தூக்கம் ஏனடா—இந்தப்
பொன்னும் பணமும் பெரிதாய்ப் போனதா?

மக்கள்போராட்டம் மலர்வா இல்லை?
கண்களைத்திறந்து சுற்றிலும் பாரடா!
நானும் நீயும் அவனும் அவளும்
நாங்களும் அவர்களும் மக்களேதானடா!

சங்குமுழங்கிய செய்தி கேட்டதா?
தூங்கிக்கிடந்ததுபோதுமே தோழா!
எங்கள்நாட்டின் விடுதலைக்காக—எங்கள்
பங்களிப்பைச்செய்வோம் வாடா!

பிழைகள்பிடிக்கே ஒதுங்கியதுபோதும்
தளைகள் அறுக்கும் தருணம் வந்ததே!
உழைப்பில் சிறிதைக் கொடுத்தாலென்னடா?
தழைக்கும் விடுதலைக்கு உரமதுதானடா!



நுட்சி.


## முதற்பரிசு பெற்ற சிறுகதை.

''எதுக்கெண்டு மண்டையைப்போட்டு உடைக்கிறது? எங்கபக்கக்காலை பார்த்தாலும் எல்லாம் கலக்கமாயும் கவலைகளாயும்...!''
—நிம்மதியில்லாமல நீண்டதொரு பெருமூச்சுவிட்டார் கந்தசாமி.
பிள்ளைகளும் நித்திரைபோலை.
''என்ன சாப்பாடு சுடவைக்கட்டோ..?''
—கேட்டபடி வந்த மனைவி சரோசா கணவனின் பெருமூச்சை அவதானித்து விட்டாள்.
''என்ன பெருமூச்சுவிடுறியள்...? அப்பிடி என்னநெருக்கடிவந்திட்டுது உங்களுக்கு?''
மனைவியின் வார்த்தைகளைக்கேட்டதும் மன உளைச்சலில் இருந்த கந்தசாமிக்குப் பற்றிக்கொண்டுவந்தது ஆத்திரம்.
''உனக்கென்ன தெரியும் என் மண்டைபடும் பாடு...எப்ப பார்த்தாலும் சாப்பாடும் படம்பார்ப்பும்...மனிசன்படுகிற பாட்டுக்கை நீவேறை!''
—எரிந்துவிழுந்தார்.
சரோசாவும் பாவம்.
உலகம் உருண்டாலும் சரி,நின்றாலும் சரி கவலைப்படவேமாட்டாள்.
பிள்ளைகள்...அந்தச்சாப்பாடு...இந்தச்சாப்பாடு...புதுப்புது விளம்பரம் தரும் உணவுகள்...நாளுக்குநாள் புதுப்புது உடுப்புகள் பிள்ளைகளுக்கு...
அதுகள் வாழ்கிறவயதிலை வாழவேண்டும்...நாளைக்கு எங்களைவிட்டுப் போனபிறகு எப்பிடிவாழ்வு அமையுமோ?...
—இதற்குள்தான் சுழல்வாள் சரோசா.
இலங்கையில் இருந்திருந்தால் இப்பிடி எண்ணவாய்ப்பிருக்குமா?
வாய்ப்பிருந்தாலும் நினைப்போமா என்பதை மறந்துவிட்டாள் சரோசா.
சரோசா மட்டுமென்ன வெளிநாட்டு அகதிகளில் அநேகம்பேர் அப்படித்தானே!
கந்தசாமியின் கவலைகள்பல ஆழமானவை...எதிர்காலம் பற்றியவை.
எதிர்காலம் எப்படியிருக்குமோ?

# அகதி

அவளெண்டொன்ட கிடைத்துவிட்டது.இனியென்ன கடைசிவரை ஜெர்மன்தானே
என்று முதலுமைச்சர் பிரகும் சர் பிள்ளைகளுக்குத் தமிழ் படிப்பிக்கவில்லை.
தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தொடங்கியபின்னும் அதுகள் டொச்சைப்படிக்கட்டும்
என்று இருந்தார்.
பிள்ளைகளும் வீட்டில் டொச்தான் பேசுவார்கள்.
அதைக்கேட்பதில் கந்தசாமிக்குப் பெரிய ஆனந்தம்.
தன்பிள்ளைகள் ஜெர்மனியிலேயே கெட்டிக்காரர்கள் என்றொரு நினைப்பு.
இனி என்னடா என்றால்...தமிழரைத்திருப்பி அனுப்பப்போறாங்களாம்
அதுவும் இலங்கைக்குப்போர்வந்தவர்கள் முதலாம்.
இவன் சரோசாவின்ர ஆக்கினையால் ஒன்றுக்கு இரண்டுகொம்பியூட்டர் வாங்கினன்
அப்ப ஒருபெடியன் சொன்னவன்...அண்ணை! இப்பிடி நீங்கள் இலங்கைக்குப்
போயிற்றவேரது மக்கள் டொக்காட்டக்கப்பிக்கிறதுமாதிரி...என்று.
நான் கேட்கவில்லை.
கெடுகுடி சொற்கேளாது!-சரிதான்.
இப்ப அங்கைபோய பிள்ளையளுக்குத் தமிழ் படிப்பிக்கவில்லை என்றதும்
சமூகத்தில் ஒரு குற்றவாளியாகிக்கணிப்பாங்களே!...மடவேலைபார்த்திட்டன்
-மனம்குமுறினார் கந்தசாமி.
மனமாவிடும்?
வேறொருபக்கத்தால் எண்ணம் ஓடியது...
பெட்டைக்கும் வயதுவந்திட்டுது...கிடக்கிற காசைவைத்துக்கொண்டு பயந்து
சாகிறதிலும்...சோஷலில் இருக்கிறவர்கள் இங்கு காசு வைத்திருக்கேலாதாம்.
விடுதலைப்போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்யாதவர்கள் காசுகொண்டு
போனாலும் விடமாட்டாங்கள் என்று சனம் கதைக்குது...
சீ..மாதாமாதம் இயக்கத்திற்கு ஒரு பத்து மார்க்குகளாவது கொடுத்திருக்கலாம்...
நான் கொடுத்தாலும் அவள் விடமாட்டாள்.
இப்ப கிடக்கிற காசைக்குடுத்து பெட்டைக்கு ஒரு பெடியனைப் பார்ப்பம்
என்றால் ஆளைப்பார்த்தாலும் இங்கை தண்ணி போடுவாங்கள்போலுள்ளது...
தேடிப்பிடிக்க முடியவில்லை.ரீவிக்காரன்வேறு பகலென்றும் பாராமல்
அப்பிடி இப்பிடி ஒருமாதிரியான படங்களைப்போடுறான்..அதுகளைப்பார்க்க
வயதுவந்த பிள்ளையளுக்கு ஒருமாதிரி வரும்தானே...
நாளென்ன காவணிக்கவில்லை பாக்கியராஜ்மாதிரி காதுமாற்றவைத்துக்
கொண்டிருக்கட்டே...போதாக்குறைக்கு சாட்டிறைக்க வெளிநாட்டுச்சனம்...
அதுகளின்ர போக்குவரத்தும் அவ்வளவுசரியில்லை...
என்ன சொன்னாலும் டொச்லாண்டுக்குவெளிநாட்டார் இடைஞ்சல்தான்.

சி.கமலநாதன்



—பெட்டையின் கல்யாண எண்ணமும் முடிவில்லாமல் குழம்பிக்கொண்டிருந்தது!
ஜெர்மனியில் கிறிஸ்தவன் என்றுசொன்னால் கொஞ்சம் அனைவகிடைக்கும்
என்று விசர்த்தனமாக மதமும் மாறிவிட்டேன்..மாறினதுதான் மிச்சம்.
நினைத்தமாதிரி பொருள்பண்டம் சம்பாதிக்கிற வழி கிடைக்கவில்லை.
போதாக்குறைக்கு இலங்கைக்குப்போய் என்னசெய்கிறது என்ற கவலைக்காக
சேர்ச்காரர் ''கந்தசாமி...நீங்கள் இலங்கைபோனதும் எங்கடைசபையைச்
சாட்சியாயிருந்து வளர்க்கவேணும் என்றுவேண்டுகோள்...
பாவம் கந்தசாமி பொருளியல் நலம்கருதி மதம் மாறினவிடயம்
இந்தக் கிறிஸ்தவப்பிரச்சாரகர்களுக்கு எங்கே தெரியப்போகிறது'?
அவர்களுடைய எண்ணமெல்லாம் மனுசன் யேசுவை விசுவாசித்து மதம்
மாறினார் என்றுதான்.
அவரும் இலங்கையில் இருந்தபோது சமயபேதமற்றவராய்த்தான் இருந்தார்.
வெள்ளைக்கடற்கரை,மடுமாதா,பாலைதீவூர் அந்தோனியார் எல்லாத்
தலங்களுக்கும் தரிசிக்கப்போனவர்தான்..ஆனால் மதம் மாறவில்லை.
இப்ப வெளிநாடுசெய்த வேலை!
சரோசாவுக்குப் புரிந்துவிட்டது—
கணவன் ஏதோ கடுமையாய்க்குழம்புகிறார் என்று.
இதமாகப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.
''என்ன களைச்சுப்போனமாதிரி இருக்கிறியள்'?..சுகமில்லையே'?''
—மெல்லத் தொட்டுப்பார்த்தாள்.
அந்த இதத்தில் கந்தசாமியின் மனச்சூடு குறைந்தது.
''எல்லாம் பிரச்சனையாய்க் கிடக்கப்பா!''என்றார்.
''எனக்கும் சொல்லுங்கோ மனம் ஆறும்!'' என்றாள் சரோசா.
தன் மனக்கஸ்டங்களைக் கந்தசாமி சொன்னார்.
ஓ..இவ்வளவு பிரச்சினைகளை நான் எண்ணிப்பார்க்கவேயில்லையே...
பாவம் அவர்...ஆண்பிள்ளை...எதுக்கெண்டுதான் கவலைப்படுகிறது...
''இஞ்சேருங்கோ...எல்லாம்தீர்ந்திடும்...நான் ஒன்றுசொல்லுறன்..கோவிக்காதேங்கோ
என்றாள்.
''சொல்!''
''பேசாமல் கனடாவுக்குப் போவம்!''
இதைக்கேட்டதும் கந்தசாமிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டுவந்தது.
''ஓமோம்...நீ இந்தளவிலை விடாமல் என்னை உள்ளுக்குத் தள்ளுற எண்ணமும்
வைச்சிருக்கிறாய் என்ன'?''
''நான் என்ன இப்ப தப்பாய்ச்சொல்லிப்போட்டன்'?''
''பின்னை என்ன'? பெண்சாதி சுதந்திரத்திற்குப் போராடுவாள்..கணவனுக்கு
யோசனை சொல்லக்கூடிய மந்திரியாய் இருக்கமாட்டாள்...இருந்தால்தானே
சொல்லுறதுக்கு!உங்களுக்கெல்லாம் சுதந்திரம்வேணும்—போராடுங்கோ!...
அதுகள் பிள்ளைகளுக்கு ஐந்துவருடமாய் தமிழ்படிப்பிக்க எண்ணவில்லை...
அதுகள் ஜெர்மன்காரர்மாதிரி டொச்பேசுதுகள்...! எயர்போர்ட்டிலை
போய்நிற்க அதுகள் டொச்சிலை கதைக்க கரைச்சல் இல்லாமல் பொலிசு
என்னைப்பிடித்து உள்ளுக்குத்தள்ள வசதியாயிருக்கும்...பிறகு சோஷல்காரன்

சாப்பிடத்தானே காசு தந்தனாங்கள்...பதினைந்தாயிரம் மார்க் உங்களுக்கு
எப்பிடிவந்தது என்று பிரச்சினைக்குவா நல்லயோசனை!''
—தான் செய்த தவறுகளையும் சரோசாவின் தலையில் சேர்த்துப்போட்டு
ஆத்திரத்தில் குமுறினார் கந்தசாமி.
விசராக்கிப்போடும்போல் மண்டைக்குள் ஒரே குடைச்சல்.
நானும் படிச்சவன்தான்...இருந்தும் என்ன பயன்?..இன்றுவரை படித்தவன்
மாதிரிச் சிந்திக்கவில்லை...நடக்கவில்லை...பணம் பணம் என்று
திரிந்ததுதான் செய்தவேலை...எவ்வளவு அறியாமை...இலங்கையிலை
எங்கடை சனமும் அந்தப்பெடியளும் நாட்டுக்காகச் செத்துக்கொண்டிருக்க
நான்...?..சீ! எவ்வளவுகேவலமான மனிதன்!''
—யோசித்து யோசித்து கந்தசாமி முடிவில் நினைத்தார்:
இதுவெல்லாம் சிவத்துரோகத்தால் வந்தவினை! இனியும் இப்பிடி
வாழக்கூடாது!
—நேரத்தைப்பார்த்தார்.
இரவு 10.30
இன்றைக்கு வெள்ளிக்கிழமைதானே
பத்தரை என்றாலும் பரவாயில்லை நல்லதை உடனே செய்யவேண்டும்.
தொலைபேசியை எடுத்து இலக்கங்களைச் சுழற்றினார்.
மறுமுனையில் தொடர்பு கிடைத்தது:
''நான் கந்தசாமி பேசிறன்...ரி.ஆர்.ஓ சீலன் இருக்கிறாரா?''
சீலன்தான் மறுமுனையில் இருந்தார்.
''தம்பி நாளைக்கு ஒருக்கால் என்வீட்டை வாருங்கோ! அகதிகள் புனர்வாழ்வு
நிதிக்கு ஒரு ஆயிரம் மார்க் தாறன்...அப்படியே விடுதலைப்போராட்டத்துக்கு
நிதிசேர்க்கிற தம்பியையும் ஒருக்கால் வரச்சொல்லுங்கோ!..மாதாமாதம்
50 மார்க்காவது நாட்டுக்காகக் கொடுக்காட்டால் நாங்கள் என்னமனிதர்!
சரி தம்பி...வணக்கம்!''
கந்தசாமியை அறியாமலே அவருடைய வாயில் நீண்டநாட்களின்பின்
வணக்கம் நுழைந்திருந்தது.
நீண்ட பெருமூச்சொன்றுவிட்டார்.
களைப்பினால் அல்ல:மண்டை இடியினால் அல்ல.தலைக்குள் இலேசாக மனசு
பாரமற்று உடல்முழுவதும் ஒரு சுகமாய் இருந்ததினால்!
இறைவனை நினைத்தார்.
''இறைவா!...
எக்கோலத்தெவ்வுருவாய் எத்தவங்கள்செய்வோர்க்கும்
அக்கோலத்தவ்வுருவேயாம் ஒன்றான இறைவா!
பலநாமங்களால் உணரப்பட்டாலும் ஏகன் அனேகனாகி நிற்கும்
பரம்பொருளே! எனக்குத் தெளிவைத் தந்ததற்கு நன்றி!''
''என்னப்பா சரோ!..சாப்பிடுவம்!''
—சாப்பிட எழுந்தார் கந்தசாமி.

# தமிழ்நாட்டைச் சுற்றினோம்.

ஆதிமனிதன் தமிழன்தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்
மூதறிஞர் ஒழுக்கநெறிகள்
முதலிற்கண்டதும் தமிழகம்தான்
காதல்வாழ்வும் புகழ்வாழ்வும்
காட்டியதும் தமிழ்நான்மறைதான்
ஓதும் அந்தத் தமிழ்நான்மறை
உலகம்போற்றும் முத்தமிழ்தான்!
—பாவேந்தர் பாரதிதாசன்.

(கடந்த இதழ்களில்:
தமிழ்நாட்டுக்குப் பிரயாணம்செய்து பலமாதங்கள் கடந்துவிட்டாலும்.
நினைவுகள் இப்போதும் பசுமையாகப் பதிந்துள்ளன.சென்னை,திருச்சி
மதுரை,திருநெல்வேலி,குற்றாலம் ஆகிய பகுதிகளுக்குச்சென்று
கன்னியாகுமரிக்குப் புறப்பட்டோம்.திருநெல்வேலியில் மகனுக்கு நோய்
ஏற்பட்டதால் எமது பிரயாணக் கலகலப்பு சிறிது குறைந்துவிட்டது....)

வீ. ஆர். வரதராஜா.



திருநெல்வேலியிலிருந்து புறப்பட்ட நாம் கன்னியாகுமரிநோக்கி பிரயாணத்தைத்தொடர்ந்தோம்.
மகன் நிமலனுக்கு ஏற்பட்ட வாந்திபேதி நோய் ஓரளவு குறைந்திருந்தது.
இருப்பினும் அடிக்கடி மருந்து வில்லைகளைப் பாவித்துக்கொண்டிருந்தோம்.
இந்தச் சம்பவம் எங்கள் பிரயாணக்கலகலப்பை ஓரளவு பாதித்திருந்தது.
மகனுக்கு ஏற்பட்ட வாந்திபேதி சிலவேளை எங்களையும் பாதித்தால்...?
மகனுக்கு மருத்துவம் செய்த டாக்டர் திரு வரதராஜன் எங்களின் பாதுகாப்புக்கருதியும் சில வில்லைகளைக் கொடுத்திருந்தார்.
வயிறுநோ,அல்லது வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் உடனடியாக வில்லைகளைப் பாவிக்குமாறு அவர் கண்டிப்பாகக்கூறியிருந்தார்.
திருநெல்வேலி மாவட்டத்தைக்கடப்பதற்குமுன்பு அங்குள்ள பிரபலமான ஆலயங்களுக்குச்சென்றோம்.
கன்னியாகுமரியை நெருங்கும்போது கேரளத்தின் வாடைக்காற்று வீசியது.
''கோளம் 25 மைல்'' என்றொரு விளம்பரப்பலகை தென்பட்டது.
அந்த இடத்தில் வாகனத்தை நிறுத்துமாறு கூறினேன்.மிகவும் குளிர்ச்சியான சூழல்.மரங்கள் அடர்த்தியாக இருந்தன.
கோளம் பொதுவாக இயற்கை அழகு நிரம்பியது என பல கவிஞர்கள் வர்ணித்துள்ளனர்.கோளத்திற்குச் செல்வது எமது பிரயாணத் திட்டத்தில் இல்லை.சிறிதுநேரம் அந்த இடத்தில் நின்று இயற்கைச் சூழலை ரசித்துவிட்டு பிரயாணத்தைத் தொடர்ந்தோம்.
கன்னியாகுமரியை நெருங்கும்போது இரவாகிவிட்டது.

நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம்செய் குமரி எல்லை. -என மகாகவி பாரதியார் பாடியதில் எவ்வளவு உண்மை என்பது அந்த இடத்துக்குச்சென்றதும் புரிந்தது.
சுற்றிலும் கடல் அலைகள் ஓசை எழுப்ப இந்தியாவின் தென் எல்லையைக் கன்னியாகுமரி காவல் காக்கிறது.
பிரயாணக்களைப்பு எம்மை வாட்டியது.
ஹோட்டலொன்றில் அறை எடுத்துத்தங்கினோம்.
மனைவியும் பிள்ளைகளும் களைப்பில் நித்திரையானார்கள்.
சாரதி சண்முகத்துடன் அடுத்தநாள் பிரயாண ஏற்பாடுகள்குறித்து விவாதித்தேன்.
காவிரிநீர் தகராறில் தமிழ்நாடு அரசு முழு அளவிலான எதிர்ப்பைத் தெரிவிக்க முடிவுசெய்திருந்தது.
காரணம் மத்திய அரசு நியமித்த நடுவர்மன்றத்தீர்ப்பை ஆந்திரப்பிரதேச மாநில அரசு நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது.
அதனால் தமிழ்நாடு முழுவதும் ஹர்த்தால் நடத்த மாநில அரசு தயாராகியது.
அவர்கள் அறிவித்த தினம் நாளை மறுநாள்.
எனவே இடையில் ஒருநாள்தான் உண்டு.
ஹர்த்தால் தினத்தன்று எங்கும் போகமுடியாது என்றும் முழுநாளும் ஒரே இடத்தில்தான் இருக்கவேண்டும் என்றும் சாரதி குறிப்பிட்டார்.
''நாங்கள் உல்லாசப்பிரயாணிகள் என்ற நிலையில் போகலாம்தானே?'' என்று சாரதியைக்கேட்டுவைத்தேன்.

''அதெல்லாம் இங்கே முடியாதுங்க!ஹர்த்தாலின்போது வெளியேபோனா அடி உதை.காரை எரிச்சுப்புடுவாங்க!'' என்றுகூறி சாரதி ஒரேயடியாக மறுத்துவிட்டார்.
எங்கள் பிரயாணத்திட்டத்திற்கு இந்த ஹர்த்தால் இடையூறாக வந்துவிட்டது.
கன்னியாகுமரியை சுற்றிப்பார்த்துவிட்டு இராமேஸ்வரம் போவதென்றும் பின்பு அங்கிருந்து கொடைக்கானல் செல்வதென்றும் முடிவுசெய்திருந்தோம்.
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ்! என்பதற்கான ஆதாரங்கள் உள்ள இடங்கள் கன்னியாகுமரியும் இராமேஸ்வரமும்.
இங்கு வந்துவிட்டோம்.ஆனால் இராமேஸ்வரம்போக ஹர்த்தால் தடைவிதிக்கிறதே கன்னியாகுமரியைச் சுற்றிப்பார்க்க ஒருநாள்போதாது.ஆனாலும் முடிந்தளவு இடங்களை சுற்றிப்பார்த்துவிட்டு அன்று இரவே அங்கிருந்து புறப்படுவதாக திட்டமிட்டோம்.
இராமேஸ்வரத்துக்குச்சென்று அங்கு தங்கிவிட்டு ஹர்த்தால்முடிய கொடைக் கானல் நோக்கிச்செல்லலாம் என்பதே சாரதி சண்முகத்தின் திட்டம்.
ஆனால் அதற்காக இரண்டுநாட்களையல்லவா ஒதுக்கவேண்டியுள்ளது.
மகன் விமலன் ஏற்கனவே வாந்திபேதிநோயால் பாதிக்கப்பட்டு களைப்படைந்து உள்ளார்.எமக்கும் சற்று ஓய்வு தேவைப்பட்டது.
எனவே மிகுந்த கவலையுடன் இராமேஸ்வரத்திற்குச்செல்வதை நிறுத்திவிட்டோம்.
கன்னியாகுமரியிலிருந்து நேராக கொடைக்கானல் செல்வது எனத்திட்டமிட்டோம்.
பழந்தமிழரின் ஓவியக்கலைக்கு பெயர்பெற்ற இடம் இராமேஸ்வரம்.
பலரும் வியக்கும் சுவரோவியங்களும் அதிசயிக்கத்தக்க ஆதிகால கற்சிலைகளும் அங்கே உண்டு.
பாறைகளில் பழந்தமிழின்பெருமையை பறைசாற்றும்பண்டைய தமிழரின் கைவண்ணம்காணும் பாக்கியம் எமக்குக்கிடைக்கவில்லை.
என் உள்ளத்தை இப்போதும் அது உறுத்திக்கொண்டே இருக்கிறது.
இறைவனின் திருவருளால் மற்றொரு சந்தர்ப்பம் கிடைக்குமேயானால் இராமேஸ்வரம்சென்று அங்கு சிலநாட்கள் தங்கலாம் என்று நினைக்கிறேன்.
கன்னியாகுமரி ஹோட்டலில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தோம்.
கதவு படபடவென தட்டப்படும் சத்தம் கேட்டது.
மிகுந்த சிரமத்துடன் கண்களை விழித்து நேரத்தைப்பார்த்தேன்.
அதிகாலை 5.30
பொழுது புலர்ந்திருந்தது.சோம்பல் முறித்துக்கொண்டு கதவைத்திறந்தேன்.
வாசலில் ஹோட்டல் பையன் நின்றான்.
''என்னப்பா இந்தநேரத்தில் வந்து தொந்தரவுசெய்கிறாயே!'' என்றுகூறி அலுத்துக்கொண்டேன்.
''ஐயா..சூரிய உதயம் பார்க்கவேண்டும் என்று சொன்னீர்களே!..மூன்றாவது மாடிக்குப்போனால் பார்க்கலாமுங்க!'' என்றான்.
அப்போதுதான் அந்தச்சம்பவமே எனக்கு ஞாபகம் வந்தது.உடனடியாக மனைவியையும் பிள்ளைகளையும் எழுப்பி விடயத்தைச்சொன்னேன்.
எல்லோரும் விரைந்து கட்டிக்கொண்டு மூன்றாவது மாடிக்குச்சென்றோம்.
ஹோட்டல் அறைகளிலிருந்த வேறு சிலரும் எங்களைப்போன்றே மாடியைநோக்கி விரைந்துகொண்டிருந்தனர்.
மூன்றாவதுமாடியில் ஒரு மொட்டைமாடி.
அதில் பலரும் நின்று கிழக்கு வானத்தை பார்த்துக்கொண்டிருந்தனர்.

நாங்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டோம்.அங்கிருந்து எனைய பகுதிகளைப் பார்த்தேன்.
சுற்றிலும் பல ஹோட்டல்கள்.அங்கும் மொட்டைமாடிகளில் சூரிய தரிசனம் காணப் பலரும் காத்திருக்கனர்.
கன்னியாகுமரியிலுள்ள சிறப்புகளில் இதுவும் ஒன்று.
கிழக்கில் சூரிய உதயத்தையும் மேற்கில் சூரியன் மறைவதையும் இங்கு பார்க்கலாம்.
இந்தக் காட்சியை இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாது. உல்லாசப் பிரயாணிகள் அனைவரும் இதற்காக அதிகாலையிலேயே எழுந்துவிடுவார்கள்.
சூரிய உதயத்தைக்காண அதிகாலையில் எழுப்பிவிடவேண்டுமா என முதல்நாள் இரவே ஹோட்டல்பையன் கேட்டான்.
ஆமாம் என்று நான் கூறியதை பின்பு மறந்துவிட்டேன்.
சூரிய உதயம் ஆரம்பமாகியது.முதலில் கிழக்கு வெளுத்தது.பின்பு கீழ்வானம் சிவந்தது.
நெருப்புக்கோளமொன்றின் மேற்பகுதி தெரிந்தது.ஆனால் மீண்டும் அது உள்ளே சென்றுவிட்டது.
இப்படி மூன்றுமுறைகள் மேலேவருவதும் மறைவதுமாக இருந்தது.
பின்பு வட்டவடிவமான நெருப்புக்கோளமொன்று கிழக்குவானில் உதயமாகியது.
எளிதில் காணமுடியாத காட்சி.ஆதவனின் உதயம் காணக் கண்கோடிவேண்டும்.
கைதேர்ந்த சிற்பி ஒருவன் இந்தக் காட்சியைக்கண்டால் சிலையாகச்செதுக்கி விடுவான்.ஓவியன் ஒருவன் பார்த்துவிட்டாலோ அருமையான சித்திரமொன்று உருப்பெறும்.
அந்த அளவுக்கு கருத்தையும் மனத்தையும் ஒன்றுசேர இழுத்தது அந்த இயற்கைக்காட்சி.
ஆதவனைப்பார்த்த திருப்தியில் ஹோட்டல் அறைக்குத் திரும்பினோம்.
சிறிதுநேரத்தில்கன்னியாகுமரியைச் சுற்றிப்பார்க்க ஆயத்தமானோம்.
முதலில் புகழ்பெற்ற அம்மன் ஆலயத்தைத் தரிசிக்கச்சென்றோம்.
முதன்முதல் ஆசியாவில் பிரவேசித்த போர்த்துக்கேய சரித்திரத்தில் இந்த அம்மன் ஆலயமும் இடம்பெற்றுள்ளது.
இரவில் கடலில் சென்றுகொண்டிருந்த போர்த்துக்கேயருக்கு வெளிச்சம் தெரிந்து கன்னியாகுமரிக் கரை ஒதுங்கியுள்ளனர்.ஆனால் அங்கு வெளிச்சவீடு எதுவும் இருக்கவில்லை.அப்படியானால் எங்கிருந்து இந்த வெளிச்சம் தெரிந்ததென அவர்கள் ஆராய்ந்தனர்.
கடலைப்பார்த்துக்கொண்டிருந்த கன்னியாகுமரி அம்மன் மூக்கில் இருந்த மூக்குத்தியிலிருந்து அந்தவெளிச்சம் தெரிந்துள்ளது.
அது சக்திவாய்ந்த மாணிக்கக்கல்மூக்குத்தி. அதன் ஒளியே போர்த்துக்கேயரை அங்கே வரவழைத்துள்ளது.
இப்போது அங்கே வெளிச்சவீடு கட்டப்பட்டுள்ளது.அம்மனைச்சுற்றி ஆலயம் எழுந்துள்ளது.
அம்மனைத் தரிசிக்க ஆலயம்சென்றோம்.ஆலயம்செல்வோரை வரவேற்க யானை ஒன்று காத்திருந்தது.

அதன் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டே ஆலயத்தினுள் செல்லவேண்டும்.
ஆலயத்தினுள்சென்று அம்மனைத்தரிசித்தோம்.பின்பு கன்னியாகுமரிச்சந்தைக்குச்
சென்றோம்.
அங்கே தமிழரின் கைவேலைப்பாடுகள் அமைந்த கைப்பணிப்பொருட்கள்
விற்பனைக்கு இருந்தன.
யானை உட்பட பல மிருகங்கள், பொம்மைகள்,மணிகள், சுவரை அலங்காரம்
செய்யும் அலங்காரப்பொருட்கள் இவற்றில் அடங்கும்.பலகை,வைக்கல்,ஓலை,களிமண்
ஆகியவை இவற்றிற்கென பயன்படுத்தப்பட்டிருந்தன.
பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் கைவேலைப்பாடுகள் இவை.
இம்மாதிரியான பொருட்கள் செல்வந்த நாடுகளில் அதிகவிலைக்கு விற்கப்
படுகின்றது.இவற்றை ஏற்றுமதிசெய்யும் வாய்ப்பு இந்தத் தமிழர்களுக்குக்
கிடைக்குமானால் தமிழ்நாடும் முன்னேறும்: தொழிற்சாலைகள் பெருகும்.
நம் தமிழரின் கைப்பணிப் பொருட்கள் மிகமிகச் சிறந்தவை.நாமும் அவற்றில்
சிலவற்றை வாங்கிக்கொண்டோம்.
படகு புறப்படப்போவதாகக்கூறி சாரதி எங்களை அவசரப்படுத்தினார்.
நாமும் துறைமுகப்பகுதிக்கு விரைந்தோம்.
''படகு எங்கே போகின்றது?'' என சாரதியைக்கேட்டேன்.
''விவேகானந்தா பாறைக்கு!''என்று பதில் வந்தது.
தமிழர்களைப்பொறுத்தவரை மிகமிக முக்கியமான இடம்.முன்பு இந்த இடம்
ஸ்ரீபாத பாறை!'' என அழைக்கப்பட்டது.
இந்தப்பாறையிலிருந்துதான் இந்துசமய முழுமுதற் கடவுளான சிவனின் சக்தி
பார்வதிதேவியார் சிவனைநோக்கி ஒற்றைக்காலில்நின்று தவம் செய்துள்ளார்.
அந்த இடம் இப்போதும் அப்படியே உள்ளது.அதனால் இப்பாறைக்கு இந்தப்
பெயர்வந்தது.பார்வதியின் அருள் இங்கிருப்பதனால் சுவாமி விவேகானந்தர்
இங்கு தவம் இருந்தார்.
சுவாமி விவேகானந்தர் இங்குபார்வதியின் அருள்பெற்றார்.அதனால் விவேகானந்தர்
பாறை என இந்தப் பாறை பெயர்பெற்றது.
இது ஒரு சிறிய மலைக்குன்று.இது கன்னியாகுமரிக் கடற்கரையிலிருந்து
சுமார் நாலு கி.மீ.தொலைவில் கடலால் சூழப்பட்டுள்ளது.
நாம் சென்ற படகு விவேகானந்தர் பாறையின் அருகில் நின்றது.எங்களுடன்
சுமார் பதினெட்டுப் பிரயாணிகள் இறங்கினர்.
முதலில் தலைக்கு 2ரூபா செலுத்தி நுழைவுச்சீட்டுப் பெற்றுக்கொண்டோம்.
பின்பு அனைவரும் மேலே ஏறும்போது ஓர் அறிவிப்புப்பலகை தொங்கியது.
''படம் பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது!''.
இந்த அறிவிப்புக்கு அருகில் சிறியதொரு அலுவலகம் இருந்தது.
கமெரா வைத்திருந்த அனைவரும் அவற்றை அந்த அலுவலகத்தில் ஒப்படைத்து
இலக்கத்தகடு ஒன்றைப் பெற்றுக்கொண்டனர். நாமும் எமது இரண்டு
கமெராக்களையும் கொடுத்து இலக்கத்தகடு பெற்றுக்கொண்டோம்.
தொடர்ந்துமுன்னேறிய எங்களை தனித்து பளிங்குக்கற்களினால் செய்யப்பட்ட
விவேகானந்தர்சிலை வரவேற்றது.
அமெரிக்கா,ஐரோப்பா உட்பட மேற்குலகுக்கு இந்துமதத்தின் நுணுக்கமான
விளக்கங்களை விவேகானந்தர் தெளிவுபடுத்தினார்.அவரது விளக்கங்கள்

வாழ்வின் நெறிமுறைக்கு வழிகாட்டியது.
வெள்ளையரில் பலர் இந்துமதத்தைத் தழுவினர்.
ஆனால் இப்போது மேற்குலகில் புற்றீசல்கள்போல மதங்கள் புறப்பட்டுவிட்டன.
அதிலும் ஒரே இறைமதத்தின்போரால் 63 சமயங்கள் என்றால்..?
மெஸ்மெரிசம், ஹிப்னாடிசம் முறையில்கூட இங்கு ஒரு மதம்.
இவ்வாறான மத மனநோயாளிகளைக்குணப்படுத்த சுவாமி விவேகானந்தரைப் போன்றதொரு இந்துமத சுவாமி மேற்குலகுக்கு மீண்டும் வரவேண்டும்.
அந்த விவேகானந்தர் சிலையைப்பார்த்ததும் இப்படி ஒரு எண்ணம் என் மனதில் உதித்தது.
விவேகானந்தர் சிலையைத்தாண்டியதும் முதலில் பார்வதிதேவியின் பாதம் பதிந்த ஸ்ரீபாத மண்டபம் எதிர்ப்பட்டது.
சோழர்காலத்து மண்டபம்.மூன்றுபிராகாரங்களைக்கொண்டது.
மூவலகையும் ஆட்டிப்படைத்த அரக்கனை அழிப்பதற்காக சிவசக்தி கன்னி பார்வதியாக அவதரித்ததினால் கன்னியாகுமரி என்னும் பெயர் உருவானது.அரக்கனை அழித்ததும் இம்மலைமீதிருந்து ஒற்றைக்காலில் சிவனைநோக்கி அன்னை பார்வதி தவமிருந்தார்.
அவரின் கோரிக்கை நிறைவுபெற்று சக்தி சிவனையடைந்தது.
தமிழ் இதிகாசம் தெளிவுபடுத்தும் நிகழ்வு இது.
அன்னையின் பாதம் பதிந்த இடம் இப்போதும் அப்படியே இருக்கின்றது.
மண்டபத்தின் மத்தியில் இது காணப்பட்டது.
அந்த இடத்தை மெய்மறக்க பக்திசிரத்தையுடன் நோக்கினோம்.
அங்கிருந்து ஒரு கோபுரம் மேல்நோக்கிக் கட்டப்பட்டுள்ளது.கோபுர உச்சியில் பிரணவத்தை எடுத்தியம்பும் ஓ பதித்த மஞ்சள்நிறக் கொடி பறக்கின்றது.
பாறையில் வட்டவடிவமான கறுப்புநிற அடையாளத்திற்கு மத்தியில் பாதத்தின் பதிவு தென்பட்டது.அருகில் சோழர்,பல்லவர் காலத்தில் செதுக்கப்பட்ட சிலைகள் கண்ணைக்கவர்ந்தன.
ஆனால் எப்படி அது சாத்தியமானது என்ற பிரமிப்பையும் அவை ஏற்படுத்தின.
இதற்கு மறுபுறம் மற்றொரு கோபுரம் தென்பட்டது.மிகப்பாதுகாப்பாக சுற்றிலும் இரும்புக்கம்பிகளினால் அடைக்கப்பட்டிருந்தது.
மத்தியில் ஒரு இரும்புப்பெட்டி இருந்தது.தங்க நிறத்தினாலான அந்தப் பெட்டியைச் சுற்றிலும் பல வண்ணங்களில் வேலைப்பாடுகள் போடப்பட்டிருந்தன
இவ்வளவு பாதுகாப்புக்கு மத்தியில் வைக்கப்பட்டுள்ள அந்தப் பெட்டியினுள் இருப்பதென்ன?
அங்கு நடமாடிக்கொண்டிருந்த ஒருவரிடம் இதுபற்றி விசாரித்தேன்.
அவர் கூறியதைக்கேட்டதும் என்னுள் ஒரு மாற்றம் தெரிந்தது.ஆச்சரியம், பிரமிப்பு,மகிழ்ச்சி,சோகம்,பக்தி...இப்படிப் பல உணர்வுகள் ஏற்பட்டன.
அந்தப்பெரிய பெட்டியினுள் பகவத்கீதை வைக்கப்பட்டிருந்தது.ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட முதல் மூலப்பிரதிகள்.
இந்தியாவின் மிகப் பெரிய சொத்து.உலக இந்துக்களின் உயிர்நாடி.
இறைவனால் உலகுக்கு முதன்முதல் அருளப்பட்ட முதல் புனிதநூல்.
மனிதனை மனிதனாக வாழவைக்கும் சக்தி கீதைக்கு உண்டு.
கீதையைப்போன்றதொரு பூரணத்துவம்வாய்ந்த ஆன்மீகநூல் முழு

நல்லபிள்ளை!

நல்ல பிள்ளை என்றுசொல்லி
நாடு நம்மைப் போற்றவேண்டும்

பள்ளிசென்று கல்வியினைக்
கற்றுணரவேண்டும்
கற்றவற்றை நல்வழியில்
பயன்படுத்தவேண்டும்

அன்னைதந்தை மற்றோரை
மதித்துநடக்கவேண்டும்
அவனியிலே உயர்ந்தபெயர்
நாம் எடுக்கவேண்டும்

தெய்வத்தையே தினமும் நாமும்
தொழுதுவரவேண்டும்
தீயவற்றைக் களைந்து நாமும்
செயற்படவே வேண்டும்

அன்னைபூமி விட்டுவந்து அயல்
நாட்டில் வாழ்ந்தாலும்
எமதுமொழி எமதுகலைவளர்க்க
நாமும் பாடுபடவேண்டும்

அடிமைப்பட்ட பூமிமீட்க
அதும் பாடுபடவேண்டும்
சுதந்திரமாய் நாம்வாழ எம்
பூமி எமக்கு வேண்டும்.

*திருமதி மகேஸ்வரி வாதராஜா.*

---

அன்புத் தம்பி தங்கைகளே!
அடுத்த இதழிலிருந்து எங்கள் இளந்தளிர்கள்
பகுதியில் அதிக அம்சங்கள் இணைக்கப்படவுள்ளன.
ஐரோப்பாவில் தமிழ்கற்பிக்கும் தமிழாசிரியர்கள்
பலர் உங்களுக்கென இந்தப்பகுதியில் எழுதுவார்கள்.
உங்களுக்கு மகிழ்ச்சிதானே!

அன்புடன்
ரே[illegible] அக்கா




சொற்களைக்கண்டுபிடித்தல் போட்டி
சரியான விடைகள்:

1. அம்மா
2. பாரதியார்
3. சிலப்பதிகாரம்
4. பேர்லின்
5. நல்லூர்
6. சங்கிலியன்
7. கணேஸ்
8. சங்கமித்தை
9. பார்த்திபன்
10. ஜூர் ஆன்
11. திருஞானசம்பந்தர்
12. புறா
13. யாழ்ப்பாணம்
14. இலங்கை
15. கேவலார்

''உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்''

---



இலக்கங்களையும்
எழுத்துக்களையும் இணைத்து
வர்ணம் தீட்டுங்கள்!

தமிழ்!

ஆம்..அது சர்வதேச மொழியாகும்.இவ்வாறு கூறுவதில் நான் பெருமையடைகிறேன்.இன்றைக்கு தமிழ் சர்வதேச சிறப்பு அற்று இருக்கலாம்..ஆனால் அதற்கு சர்வதேச தன்மை வலிமை சிறப்பு என்பன இருக்கின்றன.சர்வதேச மொழியைப்பேசுகின்ற நாம் அதற்குரிய தன்மையைப்பெற்றிருக்கிறோமா?

தமிழ் சுதந்திரமானது.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் செழுமைப்பட்டு வந்த தொன்மையான மொழி.

உலகின் மூத்தகுடியினர் என்று வாலாற்றியல் வல்லுனர்களால் குறிப்பிடப்படும் சிறப்புக்குரியவர்கள் தமிழர்கள்.

இன்று தமிழ் வளர்ச்சியும் தடைப்பட்டு நசுங்கிவிட்டமையாலும் இன்று தமிழன் தான் யார் என்பதையே அறிந்துணரமாட்டாமல் அடிமையிலும் அறியாமையிலும் அயர்ந்து கிடக்கின்றான்.மொழியைப்பொருட்படுத்தாத நாடு புறக்கணிக்கின்ற மக்கள் எந்நிலையிலும் பின்னடைந்து இழிவுறநேரிடும்.

அடிமைப்படநேரிடும்.

நம்முடைய தமிழ்மொழி நீண்ட நெடுங்கால தொன்மையும் மற்றைய மொழிகளுக்கெல்லாம் முதன்மையும் வாய்ந்த தமிழ்மொழியை அக்காலத்து தமிழ்மக்கள் போற்றிப் புகழ்ந்தார்கள்.

தமிழ் அறிஞர்கள் தங்களின் தனிவாழ்வைவிட தமிழன் பெருவாழ்வையே பெரிதாக வளர்த்தார்கள்.

இன்றைய நிலையை சற்று எண்ணிப்பாருங்கள்!

தமிழறிஞர்கள் தமிழை மதிக்கிறார்களா? ஆட்சியாளர்கள் உண்மையிலேயே தமிழைப்போற்றுகிறார்களா?

உலகெங்கும் சிதறிக்கிடக்கும்தமிழர்கள் தாய்மொழியாம் தமிழைப் போற்றி வளர்க்கிறார்களா?

செந்தமிழ் முழங்கவேண்டிய சிறுவர்தம் வாய்கள் பிறமொழிகளைத் தட்டுத்தடுமாறிப் பிதற்றுகின்றன.

தமிழ் என்றாலே வெறுப்படைகின்ற கசப்படைகின்ற நிலைக்கு வளர்க்கப்படுகிறார்கள்.ஆளாக்கப்படுகிறார்கள்.இதை இன்று நினைக்கும்போது வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாகிவிட்டோம்.

பாரதியின் பாடல் ஒன்று என் மனதில் எழுகிறது:

...இன்று பாரதத்திடை நாய்போல
ஏற்றமின்றி வாழுவாய் போ..போ..போ...
வேறு வேறு பாசைகள் கற்பாய் நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய் போ..போ..போ..!

(பாரதத்திடை நாய்போல என்பதை பாரினிலே நாய்போல என்றும் கூறலாம்)

முதற்பரிசு பெற்ற கட்டுரை.

# பீற்றர் குலம்

வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம். எமது சந்ததியினர் தமிழைப் பேசவேண்டுமானால் தமிழை எங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்தல் வேண்டும்.இது எமது முக்கிய கடமைகளில் ஒன்று.எம்தாய்மொழிக்கு நாம் செய்யவேண்டிய பங்களிப்பும்கூட.

பாமராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொல்லப் பான்மைகெட்டு
நாமமது தமிழரெனக்கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்!
என்று வினவுகிறான் பாரதி.

உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களாகிய நாம் தாய்மொழிப்பற்றினையும் மதிக்கவேண்டும்.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே!

பெற்ற தாயை எந்த அளவுக்கு நாம் மதிக்கிறோமோ.பிறந்த பொன்னாட்டையும் மொழியையும் நாம் மதிக்கவேண்டும் ஆகவே எமது சந்ததிகளுக்கு தமிழ்மொழியையும் கற்பிப்போம்.

உலகெங்கும் பரந்து அகதிகளாக வாழும் நாம் அந்நிய மொழிகளுடன் தாய்மொழியாம் தமிழையும் வளர்ப்போம் வாருங்கள்!

எம்மைப்போல் எம்மொழிக்கும் அகதி என்ற பெயர் கிடைக்குமுன் ஒருவிதி செய்வோம்.

இல்லையேல் கெட்டழிந்து நாற்றமெடுத்து வாழவேண்டிய சூழ்நிலைக்கு மேலும் உள்ளாவோம்.

பெண்

அவளுக்கு இருக்கும் புகழ்ச்சிகள் அளவிட முடியாதவை.

பெண் அடிமைத்தனத்தை நீக்குவோம் சீதனக்கொடுமையை ஒழிப்போம.

–இவையெல்லாம் வாய் நடைமுறைகள்.எம்மினத்தில் பெண் சந்தையிலே காட்சிக் வைக்கப்பட்ட பொருள் என்றும் சொல்லலாம். இது எம் நடைமுறைகளில் ஒன்று மொழியை தாய்மொழி என்கிறோம்.தமிழை போற்றும்போது அன்னைதமிழ் என்கிறோம்.

நாட்டில் நடக்கும் அக்கிரமங்களின்போது ஈழத்தாய் கண்ணீர் வடிக்கிறாள் என்கிறோம்.இப்படி பெண்களை பெருமை மிக்கவர்களாக்கி வாயளவில் புகழ்ந்து சாக்கடையில் தள்ளிவிடும்பலர் எங்கள் சமுதாயத்தில் இருக்கிறார்கள்.

கதைகளிலும் காவியங்களிலும் பெண்ணைப் புகழ்ந்துபேசும் ஒவ்வொரு ஆணும் நடைமுறையில் அவளுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்கின்றானா'?

# நாங்கள் நடக்கும் பாதை

படித்தவர் பாமரர் என்ற பேதமில்லாமல் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் பெண்களைக்கொடுமைப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். வெளிநாடுகளில் பெண்கள்நிலை இக்கட்டானது.
இங்கு பெண்கள் அறிவை வளர்த்துக்கொள்ளாவிட்டால் வாழ்க்கையைப் புரிந்துகொண்டு செயல்படுவது கஸ்டமாக இருக்கும்.
வெளியே வேலைக்குப்போகும் ஆண்கள் அங்கு பலபெண்களுடன் வித்தியாசம் பாராது பழகுகிறார்கள்.
ஆனால் தன்மனைவி மாத்திரம் வேறு ஆண்களுடன் பேச அனுமதிப்பதில்லை.
இதற்குக்காரணம் அந்த ஆணுக்கு தன்மீது நம்பிக்கை இல்லை.
இல்லையேல் தாழ்வுமனப்பான்மை இருக்கலாம்.
ஆகவே பெண்ணே!
ஒரு தனிமனித அடிப்படைத்தேவை சுதந்திரமே.
உணர்ந்து திருந்தவேண்டியவள் நீயே.

வெறி

இது ஒரு சிலரின் உள்ளங்களில் ஊறிவிட்ட பித்தவெறி.
இந்தப் பித்தவெறிக்கு எந்த மருந்தைக்கொடுத்தாலும் மாறவே மாறாது.
சாதிப்பிரிவுகளையும் சமயக்குழப்படிகளையும் தமிழர்களுக்குள் ஏற்படுத்தி ஒரு பிரிவினரே தமிழர்கள் எனக் காட்ட நினைப்பவர்கள் இங்கு பலர்.
வீணான ஆரவாரங்களும் போலி விளம்பரங்களும் அரசியலில் தம்பட்டமடித்து தலைவிரித்தாடுகின்றது.
உலகெங்கும் வாழும் மக்கள் பலப்பல பழக்க வழக்கங்களாலும் உடலின் நிறத்தாலும் உண்ணுகின்ற உணவாலும் பேசுகின்ற மொழியாலும் வேறுபட்டிருக்கலாம்.
ஒரு மக்கள்கூட்டம் அவர்கள் வாழுகின்ற நிலப்பரப்பாகிய நாடு அவர்கள் பேசுகின்ற மொழியின் அடிப்படையிலேதான் பெயர்பெறுகின்றது.
ஒரு மக்கள் கூட்டம் பேசுகின்ற மொழியைப்பொறுத்துத்தான் அவர்கள் இன்ன இனம் என பேர்சூட்டப்படுகிறார்களே ஒழிய மதத்தை வைத்து அல்ல.
பழந்தமிழ்மாட்சிமிக்க பண்புகளையெல்லாம் ஏறக்குறைய முற்றும் இழந்துவிட்ட இற்றைத் தமிழன் பல ஆண்டுகளாகப்படும் அல்லலுக்கு ஓர் எல்லையே இல்லை
பிறப்பின் அடிப்படையில் ஏராளமான சாதிகள் இல்லை. உலகில் எல்லா நாடுகளிலும்தான் மக்கள் எத்தனையோ தொழில்களைச் செய்கிறார்கள்.
இங்கெல்லாம் சாதிப்பித்து இப்படியா பேய்பிடித்து அலைக்கழிக்கிறது?
மக்கள் சாதிப்பித்துக்கொண்டு அலைகிறார்களா?
எண்ணிப்பாருங்கள்!
இவற்றையெல்லாம் விரிவாக விளக்கப் போனால் நெடிது வளர்ந்துகொண்டே போகும்.
சாதியின்காரணமாகப் புறக்கணிக்கப்பட்ட கலைஞர்கள் அன்று எத்தனைபேர்.
சாதிவேறுபாட்டால் கொல்லப்பட்ட நடைப்பிணமாக்கப்பட்ட இளம் காதலர்கள் எத்தனை எத்தனை...!ஐயோ இந்தக்கொடுமைகளுக்கு முடிவுதான் என்ன?

உங்கள் மனச்சாட்சியைக்கேட்டுப்பாருங்கள்.
நாம் நடக்கும் பாதையும் அதுவே என்றுதான் உங்கள் மனச்சாட்சியும்
சொல்லக்கூடும்.
சிறிது சிந்தித்துப்பாருங்கள்!
ஒருதாயின் வயிற்றில் பிறந்தவர்கள் கணக்காளராகவும்,வைத்தியராகவும்,
இராணுவத்தினராகவும்,இருப்பதில்லையா?
இவர்கள் எல்லாம் கண்டால் கரிசு,தொட்டால் தீட்டு என்றெல்லாம் விலகி ஓடி
விடுகிறார்களா?
அவர்கள்வீட்டை நாங்கள் போறதில்லை...அந்தவீட்டுக்கே காலவைக்கமாட்டோம்!
எனும் இப்படிப்பட்ட பேச்சுக்கள் பேசுபவர்கள் பேசிப்பேசி அலுக்காவிட்டாலும்
கேட்பவர்கள் கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன வசனங்கள்.
இவையெல்லாம் இடைக்கால நிகழ்ச்சிகள் இறந்தகாலச்செய்திகள் சாதி சமயம்
மக்கி மடிந்துவிட்டது என்று சொல்லக்கூடும். இன்றைக்கு இந்த ஜெர்மனியில்
உள்ள எம்மக்களின் நடைமுறை நிகழ்ச்சிகள்தாம். எண்ணிப்பாருங்கள்.
இவைகளை வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்தொழிக்காதவரையில் தமிழ்
மக்களாகிய நாம் இம்மியளவும் உண்மையான முன்னேற்றம் எய்தவே முடியாது.
ஒருவருக்கொருவர் உதவியும் துணையுமாய் ஓர் இனமாக ஒருதாய்வயிற்று
மக்களாக நின்று முன்னேற்றப்பாதையிலே அங்கு முனைந்துசெல்லும் நாம் இங்கு
பாகுபாடுகளை மறக்கவேண்டும்.
சமயங்களை விமர்சித்து எமக்கு நாமே சவக்குழிகளைத் தோண்டுவது என்ன
நியாயம்?
இன்று வெளிநாடுகளிலே தமிழனின் நிலை என்ன?
கூலிகளாகவும் கொத்தடிமைகளாகவும் குற்றேவல் மக்களாகவும் வாழ்கின்றோம்.
இங்கு பெரும்பாலோர் நிலை இழிநிலைதான்.
எங்கள் இயல்நிலை வேற்று இனத்தானுக்கு அடிமைப்பட்டு தன்னினத்தானை
வாழவைக்கும் தகுதியற்று மொழிநலம் பேணுகின்ற முயற்சியற்று எதிரிகளை
கும்பிட்டு வாழ்பவனாக காட்டிக்கொடுக்கின்ற கயமைக்குணம் படைத்தவனாக
வாழ்கின்ற நிலை...
வரலாற்றிலே இலக்கியத்திலே தமிழன் எத்துணை சிறப்புப்பெற்றிருப்பினும்
இன்றைய நடைமுறை ஏற்றமுடையதாக இல்லை.
தமிழர்கள் அறிவிலே தாழ்ந்தவர்களுமில்லை...
உழைப்பிலே குறைந்தவர்களுமில்லை.
ஆனால் மற்றைய இனத்தாரைப்போல முன்னேறும் திறமற்றவர்கள் என்றுதான்
கூறவேண்டும்.
கடைசியாக ஈழத்தமிழினம்,உலகத்தமிழினம் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள
வேண்டுமேயானால்,தமிழினத்துக்கு அடிப்படையான தமிழ்மொழி
காக்கவும் வளர்க்கவும்வேண்டுமேயானால்,சாதிச்சகதியினின்று விடுபட்டு
சமயக்குழப்படிகளினின்று தெளிவுற்று தமிழினத்துக்கென்ற தனித்தன்மை
வாய்ந்த நாகரிகம் பண்பாடுகளைக்காத்துக்கொள்ள வேண்டுமேயானால்,
உலகத்தமிழினத்தின் வாழ்வுக்கு ஒளிபிறக்கவேண்டுமேயானால்
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்பு
முழங்கிய நாம் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதையும்
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பதையும் மனதில் கொண்டிருக்க
வேண்டும்.

# ஒரு வாசகரின் பார்வையில்...

பூவரசு ஆசிரியருக்கு,
பூவரசு இரண்டாவது ஆண்டு விழாவைப்பற்றி
ஓர் சிறு விமர்சனம்
மறைந்துகொண்டிருக்கும் சில தமிழ்க்கலைகளை(உ+ம்-
தாளலய நாடகம்) மறையவிடாது பேணிக்காப்பேன்
என்று அடம்பிடிக்கும் பூவரசு இதழுக்கு கோடி
வாழ்த்துக்கள் முதலில்.

விழாவை நேரத்துக்கு ஆரம்பித்த முதலாவது ஆண்டு
மிகத்தாமதமாய் ஆரம்பித்தது ஏனோ? பூவரசு இம்முறை
விழாக்கள் நேரத்திற்கு ஆரம்பிக்கும் இனிவரும் ஆண்டு
எதிர்பார்ப்பு. உண்மையில் விழாவில் என்பது எனது
மன்றமே அருமையான தலைப்பு,பொருத்தமான களைகட்டியது பட்டி-
இது பூவரசு ஆசிரியரின் சாமர்த்தியமே. நடுவர்.
களிடையே வாக்கெடுப்பு நடத்தியது பொருத்தமாக பார்வையாளர்-
இனிவரும் ஆண்டு விழாக்களிலும் பட்டிமன்றம் இருந்தது
ஏற்ற தலைப்புகளுடன் கட்டாயம் நடத்தப்படவேண்டும். காலத்திற்கு
பாவலன் தந்த பரிசு நாடக

நடிகர்களின் உடை அலங்காரம் மிக அருமை. திரு.இராஜன்
அவர்கள் பாராட்டப்படவேண்டியவர். இந்நாடகம் இன்னொருமுறை
மேடை ஏற்றப்படவேண்டும். அற்புதமான உடையலங்காரம்
அருமையான

நடிப்பு இருந்தும் ஒலிவாங்கியின் குளறுபடி,தாமதமாக
ஆரம்பித்ததுபோன்ற காரணங்களால் நாடகத்தின் பெருமை
தெரியாமல் போய்விட்டது.
மொத்தத்தில் அருமையான ஒரு கலை கலாச்சார

விழாவாக
அமைந்த பூவரசின் இரண்டாவது ஆண்டு விழா பார்க்கவந்தி-
ருந்த அனைவரையும் திருப்திப்படுத்தியது என்பது
உண்மை.பூவரசே நீ ஓங்கி வளர்க!!

- நித்தியா.
(பிரேமன்)

"...விடியலைநோக்கிய பயணத்தைப் போற்றி
விட்ட பணி தொடர்வோம் ஒற்றுமையாய்க்கூடி..."



-சிறப்புரையின்
தமிழருவி ஆசிரியர்
திரு கபிலை விஜயன்



ஆண்டுமலர் முதற்பிரதி வெளியீடு,



பட்டிமன்றம்:
''வெளிநாடுகளில்
தாய்மொழி,கலா



இனிய தமிழ்

பூவரசு

2வது ஆண்டு
கலை






.நாடகம்:

பிறேமன் தமிழ்க்கலைமன்றம் பெருமையுடன் வழங்கும்

"பாவலன் பெற்ற பரிசு!"

களில் வாழ்கின்ற தமிழர்களுக்கு
கலாச்சாரம் அவசியமா? அவசியமில்லையா?''



ும் ஒரு

ளருநிறைவுக்

# இலக்கிய விழா!



மெல்லிசை



இந்துமகேஷின்

# இலக்கியத்தின் இரு பக்கங்கள்





2வது ஆண்டுநிறைவுக்

# கலை இலக்கிய பரிசளிப்பு விழா

பூவரசு தனது இரண்டாவது ஆண்டுநிறைவையொட்டி நடாத்திய சிறுகதை கவிதை கட்டுரைப்போட்டிகளிலும்,சிறுவர்களுக்கான எழுத்து /சித்திரப்போட்டிகளிலும் பரிசுபெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா கலை இலக்கிய விழாவாக 18.01.93 திங்களன்று பிறேமன் நகரில் சிறப்புற நடைபெற்றது.
ஜேர்மனியின் பலபாகங்களிலும் இருந்து பெருமளவு வாசகர்களும் இலக்கிய ஆர்வலர்களும் வருகைதந்திருந்த இவ்விழாவை திருமதி வரதாராஜா,திருமதி இந்துமகேஷ் ஆகியோர் விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.
திருமதி வசந்தாதேவி புவனேந்திரன் இறைவணக்கப்பாடல்பாட, செல்வி பிரியா மகேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.
தமிழருவி ஜெர்மனி பத்திரிகையின் ஆசிரியர் திரு நயினை விஜயன் பூவரசு இனிய தமிழ் ஏட்டின் இரண்டாவது ஆண்டுமலரின் முதற்பிரதியை பூவரசு வாசகர்வட்டத்தைச்சேர்ந்த திரு சு.மகேந்திரமூர்த்தி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு சிறப்புரை ஆற்றினார்.
புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களின் தாய்மொழிப்பற்று அருகிவிடக்கூடாது என்பதை வலியுறுத்திய அவர் இன்று பல்வேறுநாடுகளில் இடம்பெயர்ந்துவாழும் தமிழ்ச்சிறார்களுக்கு தமிழே தொடர்புமொழியாக இருக்கவேண்டும் என்றார்.

தொடர்ந்து வாசகர்கள் சார்பில் திருமதி சசிகலா தேவாராஜா திருவாளர்கள் பீற்றர்குலம், ராஜகருணா, திருமதி சித்திராதேவி தங்காராஜா ஆகியோர் பூவரசுக்கு வாழ்த்துச்செய்திகளை வழங்கினர்.
செல்விகள் வதனி நவரத்தினம்,சுரேகா கமலநாதன் ஆகியோர் நமது தாய்மொழி என்னும் தலைப்பில் உரையாற்றினர்.
பூவரசு நடாத்திய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகள் விழாவுக்கு வந்திருந்த இலக்கிய ஆர்வலர்கள் வாசகர்கள் மூலம் வழங்கப்பட்டன.
திருமதி சாந்தராணி பத்மகுமார் தயாரித்து வழங்கிய மழலையர் நடனம்,கண்ணன் நடனம், கும்மிநடனம் ஆகியவை எங்கள் இளந்தளிர்களின் திறமையை வெளிப்படுத்துபவையாய் அமைந்தன.
தொடர்ந்து இடம்பெற்ற பட்டிமன்றத்தில்-

''வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களுக்கு தாய்மொழி கலாச்சாரம் அவசியமா அவசியமில்லையா'? ''என்னும் தலைப்பில் விவாதமேடை அமைந்தது.வீரகேசரி முன்னாள் பத்திரிகையாளர் வீ.ஆர்.வரதராஜா நடுவராகக் கலந்துகொள்ள,திருவாளர்கள் இ.க.சிவராஜன்,செ.யோகநாதன், மகேந்திரராஜா,பீற்றர் குலம்,திருமதிகள் ஞானேஸ்வரி கந்தசாமி, பெனடிக்ரா ஞானச்செல்வம் ஆகியோர் விவாதத்தில் பங்குகொண்டனர். பார்வையாளர்கள் வழங்கிய கருத்துக்கணிப்பின்படி மூன்றில் இரண்டு பங்கினர் தாய்மொழி கலாச்சாரம் அவசியம் என வாக்களித்து நடுவரால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சென்ற ஆண்டு விழாவின்போது இந்துமகேஷின் கைவண்ணத்தில் உருவான ''அயல்நாடு போயிருந்த அண்ணை இப்ப திரும்பிவாறார்'' நாடக பாணியில் இந்த ஆண்டு இந்துமகேஷின் கைவண்ணத்தில் உருவான தாள இசைநாடகம் ''இலக்கியத்தின் இருபக்கங்கள்'' புறநானூற்று வீரத்தாயையும்,இன்றைய தமிழீழ வீரத்தாயையும் ஒப்பீடு செய்து வரையப்பட்டிருந்தது.

பங்கேற்ற சிறுவர்கள்,மங்கையர்,இளைஞர்கள் பாத்திரங்களுக்கு உயிரூட்ட இசையை பத்மஸ்ரீ சிறப்புற அமைத்திருந்தார்.

தொடர்ந்து க.பாலசுப்ரமணியம் குழுவினரின் மெல்லிசை இடம்பெற்றது.

பிறேமன் தமிழ்க்கலைமன்றத்தின் தயாரிப்பான-

''பாவலன் பெற்ற பரிசு'' நாடகம் விழாவுக்கு மேலும் மெருகூட்டிற்று.

பூவரசு ஆசிரியரின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர் அன்ரன் பீலிக்ஸ் தனது வெண்கலக்குரலால் மிக அழகுறத்தொகுத்து வழங்கினார்.



# மூடவாழ்க்கை

கட்டைவிரல் கொண்டுமட்டும்
காடளக்கப் புறப்பட்ட
ஒற்றைத் தனி மனிதனவன்,
கற்பனையில் வாழ்கின்றான்
கடவுள்தனைக் காண்பேனென்று
மட்டமதி மூடா-உனக்கு
மறை ஞானம் ஒருகேடா?

அகப்பொருளாய் இருக்கின்ற
ஆன்மாவை உணராமல்
புறத்தே போலிகளில்
மறைபொருளைத் தேடும்
மட்டமதிமூடா-உனக்கு
மறைஞானம் ஒரு கேடா?

பட்ட கடன்பத்திரத்தைக்
காணாமல் மறைத்துவிட்டு
சொத்துரிமை சேர்த்ததென்று
சொப்பனத்தில் வாழும்
மட்டமதிமூடா-உனக்கு
மறை ஞானம் ஒரு கேடா?

ஒட்டிவைத்த ரசம் முழுதும்
உலர்ந்தகன்ற கண்ணாடியில்
முகம்பார்க்க முயற்சிக்கும்
மட்டமதிமூடா-உனக்கு
மறைஞானம் ஒரு கேடா?

ஏறிச்செல்லும் பாதையில்
இருக்கின்ற தன்வீட்டுத்
தோட்டத்திற்கு
எதிர்த்திசையில் நடந்து
ஏமாந்துநிற்கின்ற
மட்டமதிமூடா-உனக்கு
மறைஞானம் ஒரு கேடா?

ஒட்டகம்தான் உன்னைப்போல்
தன்முகத்தை மறைத்துவிட்டு
தான் மறைந்ததென நினைக்கும்
மட்டமதிமூடா-உனக்கு
மறைஞானம் ஒரு கேடா?

கொட்டும் மழை கொடுங்காற்று
வெட்டவெளி மையத்தில்
நெய்விளக்கு ஏற்றிவைக்க
மெய்வருத்தி உழைக்கும்
மட்டமதிமூடா-உனக்கு
மறைஞானம் ஒருகேடா?

வைத்தபொருள் அகத்தில்
பத்திரமாய் இருக்க
பித்தனைப்போலங்கே
சித்தமொரு இடம்தேடும்
மட்டமதிமூடா-உனக்கு
மறைஞானம் ஒரு கேடா?

விட்டகுறை என்ன விளங்காமல்
வேதாந்தப்புத்தகத்தைத்
தினம் புரட்டுகின்ற
மட்டமதிமூடா-உனக்கு
மறைஞானம் ஒரு கேடா?

-ப.இராஜகாந்தன்,

# சுமை

கொளுத்துகின்ற கோடைவெய்யில்
அழுத்துகின்ற சுமைகள் நெஞ்சில்
அழுத்தமுடன் மிதிவண்டி மிதிக்கின்றான்
மனச்சுமையை மிஞ்சுகின்ற
விறகுச்சுமை பின்னே!
இன்னும் மணிக்கணக்காய்
ஓடவேண்டிய தூரம் முன்னே!
மனையாளின் வாட்டமுகம் கொஞ்சம் மாறும்
மதலைக்குப் பால்மா வாங்க கொஞ்சம் தேறும்
அவன் மனதிலே பலபல எண்ணங்கள்
அவன் உடலிலே உப்புநீர் வியர்வை
அவன் வயிற்றுக்குள்ளே கடமுடாச் சத்தம்
காலையிலே கொஞ்சம் பழையசோறு
கால்மணிநேர ஓட்டத்தில் ஜீரணம்
மதியம் திரும்பிய நேரம்
களைப்புத்தீர ஒதுங்கினான் ஓரம்
மீண்டும் பயணம்
ஓட மறுத்தது மிதிவண்டி
அவன் உள்ளத்திலே
சுருக்கென்று முள்ளுத் தைத்தது
ஒரு பக்க டயரில் பஞ்சர்!

-இ.சம்பந்தன்.



# 1992
## சில முக்கிய நிகழ்வுகள்.

* அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பில் கிளிண்டன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைத் தோற்கடித்த இவர் 12 ஆண்டுகளின்பின் வெற்றிபெற்ற ஜனநாயகக்கட்சி வேட்பாளர் என்ற பெருமையையும் பெற்றார்.

* அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸில் ஏற்பட்ட கலவரங்களில் 42 பேர்வரை கொல்லப்பட்டனர்.கறுப்பினத் தலைவர் ஒருவரைத் தாக்கிய பொலிசார் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து 3 நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற கொள்ளை,தீவைப்புச் சம்பவங்களாலும் கலவரங்களாலும் பல மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களும் சேதமடைந்தன.

* டென்மார்க் மக்கள் மாஸ்டிக்ற் ஒப்பந்தத்தை மிகக்குறைவான வீத வாக்குகளால் நிராகரித்தபோது பிரான்ஸ்மக்கள் மேற்படி ஒப்பந்தத்தை மிகக்குறைவான வாக்குகளால் அங்கீகரித்தனர்.

* யூகோசிலவியாவில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் லட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டதோடு 50 ஆயிரம்பேர்வரை கொல்லப்பட்டனர்.

* பலதேர்தல் கணிப்புக்களையும் மீறி பிரிட்டிஷ் தேர்தலில் ஜோன்மேஜர் வெற்றிபெற்றார்.கன்சர்வேர்ட்டிவ் கட்சி 4வது முறையாக தொடர்ச்சியாக ஆட்சியமைக்கும் வாய்ப்புப்பெற்றது.

* ஜேர்மனியில் தீவிர வலதுசாரிகளின் வன்செயல்கள் அதிகரித்தன.

* செக்கோசிலவக்கியா செக்நாடு,சிலோவக்நாடு என இருநாடுகளாகப் பிரிந்தது.

* சோமாலியாவில் பட்டினியினால் மரணங்கள் அதிகரித்ததையடுத்து உணவுவிநியோகத்தைச் சீர்படுத்துமுகமாக ஐக்கியநாடுகள் சபையின் ஆதாவுடன் அமெரிக்கபடைகள் தரையிறங்கின.

* இஸ்ரேல் 400க்கு மேற்பட்ட பாலஸ்தீனத்தவர்களை மேற்குவங்கி காஸாப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றியது.

* ஐக்கியநாடுகள் சபை 22 ஆயிரம் அமைதிகாக்கும் படையினரைக் கம்போடியாவுக்கு அனுப்பியது.

* 1997ம் ஆண்டு முதல் சீனாவின் கட்டுப்பாட்டில் வரவிருக்கும் கொங்கொங்கின் புதிய கவர்னராக பிரிட்டிஷ் கன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவராக இருந்த கிறிஸ்பட்டன் தெரிவானார்,ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான இவரது ஆலோசனைகள் சீனாவினால் நிராகரிக்கப்பட்டன.

* ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபுலை முஜாகிடீன் படைகள் கைப்பற்றி முன்னாள் கம்யூனிஸ்ட் ஜனாதிபதி நஜிபுல்லாவை வீழ்த்தினர். இதையடுத்து முஜாகிடீன் கொரில்லாக்களிடையே சண்டைகள் ஆரம்பமாகின.

* இலங்கையைச்சேர்ந்த 13 வயதான கணேஷ் சிற்றம்பலம் என்னும் சிறுவன் பிரிட்டனில் பல்கலைக்கழகம் ஒன்றில் கணிதத்துறையில் பட்டம்பெற்று வயதில் குறைந்த பட்டதாரி என்ற பெருமைபெற்றான்.

* ஸ்பெயின் நாட்டில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன.

* இந்தியாவின் அயோத்தியில் பாபர் மசூதியை இந்துத்தீவிரவாதிகள் இடித்துத் தரைமட்டமாக்கியதை அடுத்து இந்தியா முழுவதும் இந்து –முஸ்லிம் கலவரங்கள் இடம்பெற்றன.1100பேருக்குமேல் கொல்லப்பட்டதுடன் 4400 பேருக்குமேல் காயமடைந்தனர்.

* தமிழகத்தில் இருந்து ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப இந்தியாவும் இலங்கையும் கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தன.அகதிகளைத் திருப்பி அனுப்புதல் ஆரம்பமாயிற்று.

* இலங்கையின் 80 ஆண்டுகால வரலாற்றில் இல்லாதவாறு பெய்த மழை காரணமாக 3 லட்சம்பேர்வரை வீடுகளை இழந்தனர்.

* வடபகுதியில் தாகுதல்களில் ஈடுபட்டிருந்த விமானமொன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

* சுதந்திரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான கோவைமகேசன் தமிழகத்தில் காலமானார்.


* இந்தியாவின் 9வது ஜனாதிபதியாக சங்கர் தயாள்சர்மா தெரிவானார்.

* ஊர்காவற்துறை அராலித்துறையில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலுக்கு வடபிராந்திய இராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவ உட்பட 10 அதிகாரிகள் பலியானார்கள்.

* பலகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களுடன் இலங்கைக் கடற்படைக் கப்பலொன்று கற்பிட்டிக்கு அண்மையில் கடலில் மூழ்கியது.

* இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான கெலிகப்டர் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

* இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தெரிவுக்குழுவில் இருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறியது.

உலகிலும் இல்லையென பாண்டித்தியம்பெற்ற பல அறிஞர்கள் கூறியுள்ளனர்.
ஒவ்வொரு இல்லத்திலும் பகவத்கீதை இருப்பது மிக மிக அவசியம்.
அதிலும் ஒவ்வொரு இந்துவும் கீதைவைத்திருக்கவேண்டும்.குறிப்பாக வெளி
நாடுகளில் இருக்கின்ற இந்துக்கள் கீதை வாசிக்கவேண்டும்..அப்போதுதான்
இங்கு இந்துமதத்தைத் தூற்றுபவர்களுக்குத் தெளிவான விளக்கமளித்து
அவர்களையும் நல்வழிப்படுத்தமுடியும்.பகவத்கீதையின் மூலப்பிரதிகள்
பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து என்னால் விடுபட
முடியவில்லை.பிரமிப்புடன் அதே இடத்தில் நின்றுகொண்டிருந்தேன்.
அதனை சாதாரண இடமாக என்னால் கருதமுடியவில்லை.
இருப்பினும் மிகுந்த சிரமத்துடன் அங்கிருந்து புறப்பட்டு மண்டபத்தின்
ஏனைய பகுதிகளையும் பார்த்துக்கொண்டு வெளியே வந்தோம்.
வெளியே வந்ததும் மலைமேலிருந்து சிறிதுநேரம் கடலையே பார்த்துக்
கொண்டிருந்தேன்.
''கடலே!..எங்கே என் இனிய தமிழை ஒளித்துவைத்துள்ளாய்?''என்று கேட்க
வேண்டும்போல் தோன்றியது.
குமரிக்கண்டத்தில் ஈசனைத் தலைவராகக்கொண்டு முதல் சங்கம் வளர்ந்தது.
அதில் 1110 புலவர்கள் இருந்ததாக இதிகாசம் கூறுகிறது.பல்லாயிரம்
ஆண்டுகளுக்கு முன்னுள்ள சரித்திரம்.
சங்கத் தமிழ்வளர்த்த குமரிக்கண்டம் இந்தக் கடலினுள் மூழ்கிவிட்டது.
முன்பிருந்த கன்னியாகுமரி ஆலயமும் கடலினுள்தான் இருக்கிறது.
இப்போது நான் இருக்கும் இடமும் அந்த ஆலயம் இருந்த மலையின் மேற்பகுதி.
அங்கே நிற்கும்போது நான் ஒரு தமிழ் இந்துவாக இருப்பதில் பெருமை
அடைந்தேன்.ஏனெனில் உலகின் மூத்த குடி தமிழ்க்குடி.மூத்தமதம் இந்துமதம்.
மனைவி எங்கோ இருந்து அழைப்பதைக்கேட்டு சிந்தனை கலைந்தேன்.
தமிழன் என்ற செருக்குடன் சற்று நிமிர்ந்து நடந்தேன்..அடுத்து நாங்கள்
அருகிலிருந்த விவேகானந்த மண்டபத்தை நோக்கி நடந்தோம்.
அங்கும் எமக்குப் பல ஆச்சரியங்கள் காத்திருந்தன.

(அடுத்த இதழில்)

இந்த இதழில் இடம்பெறாதவைகள்-

என் வாசகர்களைத்தேடி...!
(அனுபவத்தொடர்)
நிதர்சனம்
(நெடுங்கதை)

ஆகிய பகுதிகள்
அடுத்த இதழில்

**கன்னித்தமிழே!
ஓர்கடிதம்...**

கன்னித் தமிழாம் எந்தனுயிர்க்
காதலி யவளெனக் கோர்கடி தம்.-
என்னேயவளின் நடையழகு!
என்நினை வின்னின் றெழுதுகி றான்!
மன்னவனே! மன மானையி நிம்
மங்கை நானொப் போவதென் று
அன்னவனுக் காய் பாளெழு தி
அனுப்பியதோயிப் பா மாலை!

மாலைப் பொழுதின் மஞ்சள் வா
னதியே உந்தன் மணமென் வாம்
காலைக் கதிரின் ஒளிவெள் ளம்
கானியமே! நீ பொன் வண்ணம்!
ஒளை பொன்தி வன்னைத வம்
ஒன்றை ஏக்கே வென் திருப்பம்
வாலைக்குமரி யுந்தனிடம்
வந்து விடும்போ தக்கிடும்!

அந்திப்பொழுதுந்தன் கை தாம்
அது செங் காமனை யிதமோ ராம்
சிந்திவிழும் தளி மதுவோடும்
தந்துவிடும் தமிழ்க்கவியாவும்
விந்தையடி நீ செந்தமிழே!
விஞ்சிடும் போதை யுன் புகழே!
செந்திருவே! உனைச் சேர்ந்திடவே
வந்தேனம்மா வந்துவிடு!



வந்துவிடு!உனைத்தந்துவிடு!
வாழ்வினில் நீ ஒளியின் சுவடு
செந்தளிராம் உன் கைகளொடு
சேயெனவே யெனை ச்சேர்த்துவிடு.
நின் திருமார்பினில் சூடவரும்
நித்திலமே ஒரு கோடியொரு
தத்தியிலன்பதில் தந்துவிடு
கையினில் திருமணம் கவலைவிடு!

கவலை விடு என் கனிரசமே!
கற்றவர் நாடும் கவிநயமே!
திவலைகொடு உன் திருவினிலே
தெரிபுதடா அதில் குவலயமே!
அவனியிதே உன் அவையதிலே
ஆடுது பாரடா உன்வசமே!
நவநிதியே! வான் மழைமதியே!
நாயகியே! அமரா வதியே!

வதியேன் என்றும் இவ்வுலகில்
வண்ணமலர் விழி நீயின்றி
கதியேதென்று கலங்குகிறேன்
காலமெல்லாம் உன் நிழலின்றி
விதியே என்றிங்கிருந்தாலும்
விடுகிறதா உந்தன் நினைவு?
மதியேதென்று இருள்வென்று
இரவினிலும் ஒளிரும் கன்னி!

*தமிழ்க்குருவி.*

# தாவி

ஐக்கிய நாடுகள் சபையில் இன்னுமொரு புதியநாடு-
தமிழீழம்!
ஒருநாடும் ஒருகொடியும் கிடைத்தாயிற்று.தெம்மாறிப்போன குருத்தோலை வளைவுகளும்,சருகாகிப்போன மாவிலைத்தோரணங்களும் தமிழீழம் விழாக்கோலம்பூண்டு நாற்பது நாட்களுக்குமேலிருக்கும் என்று கூறின.
அரசுப்பேருந்தில் தமிழீழத்தின் தலைநகரைநோக்கி என் பயணம்.
பாதைகள் இன்னும் சீராக்கப்படவில்லை.குண்டும் குழியுமான இந்தப் பாதையில் மிக நிதானமாக தமிழீழப் பேருந்து நகர்ந்தது.
அன்னியனின் சித்திரவதைக்கு உள்ளான தங்கள் தாய்மண்ணின் காயங்களை ஆற்றுகின்ற பெரும்பணியில் ஆங்காங்கே ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தனர் தேசபக்தர்கள்.
செல்விழுந்து உடைந்துநின்ற பெருமரங்கள் தளிர்க்கத்தொடங்கியிருந்தன இவையெல்லாம் நல்ல சகுனம்தான்.
அண்மையில் சிங்கள சிறீலங்காவில் சிறைவைக்கப்பட்டிருந்த அனைத்துத் தமிழீழக்கைதிகளும் தமிழீழ நீதித்துறையிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று தமிழீழ அரசு கேட்டுக்கொண்டதும் அனைத்துத் தமிழீழக்கைதிகளும் சிங்கள சிறீலங்காவில் இருந்து தமிழீழச் சிறைகளுக்கு மாற்றப் பட்டதும் பத்திரிகைச் செய்திகளாகியிருந்தன.
கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டு சிங்களச்சிறையில் ஆயுட் தண்டனை அனுபவித்துவந்த ராசுக்கிளியும் மாற்றப்பட்டான்.அவனை விடுதலை செய்யவேண்டும் என்று சில காரணங்களை முன்வைத்து நான் தமிழீழ நீதித்துறைக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினேன்.
மேலதிக விளக்கத்துக்கான அழைப்பும் இலவசப் பிரயாணச்சீட்டும் தபாலில் என் வீட்டுக்கு வந்தது.
இதுதான் தலைநகர்நோக்கி நான் பயணம்செய்யும் காரணம்.

அமுதநிதி சுதர்சன்.

ராசுக்கிளி ஒன்றும் விடுதலைவீரன் இல்லை.
ஊருக்குள் மிக மரியாதையாக வாழ்ந்த வீரலிங்க வண்ணக்கரை கத்தியால் வெட்டிக்கொன்ற கொலைகாரன்!
ஏற்கனவே பலதடவை மனநோயாளியாக அவன் இருந்திருக்கிறான் என்ற ஒரேகாரணத்தால் தூக்குத்தண்டனையிலிருந்து ஆயுட் தண்டனையாக அவன் தண்டனைக்குறைப்புப் பெற்றிருந்தான்.
அரசியல் கலப்பில்லாத ஒருகொலையை இரக்கமின்றிச்செய்த முழுக்கொலைகாரன் ராசுக்கிளி.இது முற்றிலும் உண்மை.
அப்படியானால் நான் ஏன் அவனுடைய புனர்வாழ்வில் அக்கறைசெலுத்தவேண்டும் -இப்படி நீங்கள் முணுமுணுப்பது என் காதில் கேட்கத்தான் செய்கிறது.
அவனை விடுவிக்கக்கோரி விடுத்த விண்ணப்பத்தில் நான் விபரித்தவற்றைப் படித்தபின் மேலதிக விளக்கத்துக்கு அழைப்புவிடுத்திருக்கிறாரே சட்டமா அதிபர்.
எனக்கு ராசுக்கிளியின் விடுதலையில் இருந்த அக்கறை அவரையும் தொற்றிக் கொள்ளவில்லையா?
அது உங்களையும் பற்றிக்கொள்ளவேண்டாமா?
கொஞ்சம் நிமிர்ந்து உட்காருங்கள்!
ராசுக்கிளியின் கதையை உங்களுக்கும் சொல்லிவிடுகிறேன்.

எங்களுடைய கிராமத்தில் ராசுக்கிளியைத் தெரியாத மனிதரே கிடையாது.
ஊரில் இருந்து மிகவும் ஒதுங்கியே ராசுக்கிளியின் குடிசை உள்ளது.
அவனுடைய தகப்பனார் ராசுமுத்துவோடு அவன் சிறுவனாய் இருந்த நாட்களிலே அவனை எனக்கு நன்குதெரியும்.
வயதுக்கும் அவனுக்கும் தொடர்பில்லாத அவன் வளர்ச்சி. மூளையின் குறைபாட்டை வெளிப்படுத்தியபோது அவனுடைய வயதுப்பிள்ளைகளிலிருந்து அவன் ஒதுக்கப்பட்டான்.
இருபது வருடங்களுக்குமேல் என்று எண்ணுகிறேன்,
கதிரைகளின் இருக்கைப்பின்னல் போடுவதற்கான பிளாஸ்டிக் வயர்கள் எங்களுடைய கிராமத்துக்கு அறிமுகம் ஆகாத இயற்கையோடு ஒன்றிய நாட்கள் அவை.
எங்கள் கிராமத்தில் கதிரைபின்னும் ஒரேயொரு ஆள் ராசுக்கிளியின் தகப்பனார்தான்.

காட்டில் முட்கள் நிறைந்த பிரம்புக்கொடிகளை வெட்டி இழுத்து முட்பட்டைகளைநீக்கி பிரம்பை வேறாக்கி நீளமாக வெட்டிக் கட்டி தோளில் சுமந்து குடிலுக்குக் கொண்டுசெல்வார் அவர்.
வீட்டிலேயே அடைந்துகிடந்த ராசுக்கிளி பிரம்புகளைவார்ந்து நார்களாக்கி வளையங்களாக அவற்றை சுற்றி நேர்த்தியாக கட்டிவைப்பான்.
இப்படி ஆரம்பித்த குருகுல வாழ்க்கையில் ராசுக்கிளி கற்றவித்தைதான் கதிரைகளுக்கு பிரம்புப்பின்னல் போடுவது.
உழைப்பு என்பதற்கு அர்த்தமே தெரியாத பல பரம்பரைப்பணக்காரர்கள் சொகுசாக சாய்ந்து குட்டித்தூக்கம்போடும் தேக்குமரத்திலான சாய்வு

நாற்காலிகள்கொட்டக்கம் சோபா.கட்டில் கதிரை என்று பலதாப்பட்ட
தளபாடங்களுக்கு ராசுக்கிளியின் தந்தை பிரம்பப் பின்னல் போட்டிருக்கிறார்.
பிரம்பு வாருவதற்கான ஒரு சிறிய கூரான கத்தி அவரோடு கூடவே
எப்போதும் இருக்கும்.வருடக்கணக்காக அவருடன் உழைத்த காரணத்தால்
பிடி தேய்ந்து தமன்றிருந்தது.அப்போதுகூட அதனை அவர் கைவிட்டதில்லை.
பிரம்பு நாராலேயே அழகாக இறுகக்கட்டி உழைப்பின் சின்னமாகவே மதித்து
அதன்மேல் பக்திசெலுத்தினார்.
ஒருநாள்கூட ஓய்வின்றி உழைத்த அவர் தனது கத்தியோடுசேர்த்து
ராசுக்கிளிக்கென்று விட்டுச்சென்றது அந்த மண்குடிசை.ஒரு மண்ணெண்ணைக்
குப்பிவிளக்கு.இரண்டுமூன்று மண்பாத்திரங்கள்.
‘‘மண்ணோடு மண்ணாகிப்போகும் வாழ்வில் அர்த்தமாக ஒன்று இருக்குமானால்
உழைப்பு ஒன்றுதான்!’’ என்று சொல்லாமல் சொல்லிவிட்டு சேரவேண்டிய
இடத்துக்கு போய்ச்சேர்ந்துவிட்டார் ராசுக்கிளியின் தகப்பனார்.
ஊர் ஒதுக்குப்புறத்தில் அந்தக்குடிசையும் ராசுக்கிளியும் தனித்துப்போனார்கள்.
சனநடமாட்டமான பகுதியில் இருந்து மிகவும் ஒதுங்கிப்போய்விட்ட அந்த
குடிலுக்கு வடக்கே எல்லைக்காவல் வைரவன் கோயிலும் கிழக்கே மயானமும்
தெரியும்.புதைப்பது எரிப்பது இரண்டும் அங்கேதான்.
மறந்தும் பேசாத கடவுள் ஒருபுறம்.பேசமறந்த மனிதர் மறுபுறம்.
வைரவன் கோயிலில் தீமிதிப்பு நடக்கும்.உயிரோடு தீயில் நிற்கும்
பக்தர்களைக்காண கிராமமே கோயிலில் திரண்டுவரும்.ராசுக்கிளிக்கு
மட்டும் அது புதினமாகத் தெரியாது.குடிசைக்குள் முடங்கிக்கொள்வான்.
உயிரற்ற மனிதர்கள் மயானத்தில் தீயில் கிடப்பதை இரவுநேரங்களில்
வைத்தகண்வாங்காமல் பார்த்தபடியே இருப்பான்.
வருடத்தில் ஒரு தடவைமட்டும் கதவுதிறந்து தீமிதிப்பு நடைபெறும்
வைரவன்கோயில் ஏனையநாட்களில் வெறிச்சோடிக்கிடக்கும்.
இரவின் நிசப்தத்தை கிழித்துக்கொண்டு எங்கிருந்து ஒரு நாய் ஊளையிட்டாலும்
கிராமவாசிகள் எல்லோரும் வைரவர்கோயிலையே ஒருதடவை எண்ணிக்
கொள்வோம்.
யாராவது மண்டையைப்போட்டுவிட்டால் கிராமத்தின் ஆண்கள் எல்லோரும்
அதனைத்தூக்கிக்கொண்டு ராசுக்கிளியின் குடிலைக்கடந்து மயானத்துக்குப்
போய்த்திரும்புவார்கள்.
மற்றும்படி பயத்தை உண்டுபண்ணும்படியான பிராந்தியத்துக்கு விறகு
பொறுக்கக்கூட யாரும் போவதில்லை.
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வைரவன் கோயில் வண்ணக்கர் வீரலிங்கம்
மட்டும் அதிகாலையில் கையில் ஒரு வாளியுடன் கோயிலுக்குப்போவார்.
உபயம் ராசுமுத்து என்று அந்த வாளியில் குறிபோட்டிருக்கும்.
வாளியை கோயில் துலாவில் கட்டிக் குளிப்பார். கோயிலைச் சுற்றிக்கூட்டி
சுத்தம்பண்ணி சாமிகும்பிட்டு திருநீறு இட்டுக்கொண்டு வீடுதிரும்புவார்.
போகும்போது துலாவில் இருந்து வாளியை அவிட்டு கையோடு கொண்டு
போய்விடுவார்.அந்தவாளியை காணுகிறபோது தன்னுடைய தகப்பனாரே
உயிரோடு கோயிலுக்குப்போவதுபோல் ராசுக்கிளிக்குத்தோன்றும்.

குடிலைவிட்டு வெளியேவராத ராசுக்கிளி தன் தகப்பனார் இறந்து
ஒருவாரமாகியும் குடிலுக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தான்.வயிறென்று
ஒன்று இருக்கிறதே.தன்னுடைய தகப்பனார் பக்தியோடு வைத்திருந்த
சின்னக்கத்தியை எடுத்துக்கொண்டு குடிசைக்கு வெளியே தலைகாட்டினான்.
அரைக்கை பெனியன்.வெள்ளை ஆனால் கொஞ்சம் அழுக்கேறிய சாரன்.
செருப்பில்லாத அகலமான கால்பாதங்கள்.குனிந்த தலை, புறங்கைக்
கட்டு.வலக்கையில் கூரிய அந்தச் சின்னக்கத்தி. காப்புப்போட்டது
போல் இரண்டுமூன்று பிரம்புநார்ச் சுருள்கள்.
கிராமத்துக்குள் ராசுக்கிளியின் நடமாட்டம் ஆரம்பமாயிற்று.
குனிந்த தலைநிமிராமல் ராசுக்கிளி தெருக்களில் நடப்பான்.எதிரே யார்
வந்தாலும் அது யார் என்று அறியும் ஆவல் அவனிடம் துளியும் இருக்காது.
யாரோடோ அல்லது எதனுடனோ கோபமாக இருப்பதுபோல அவனுடைய
முகத்தில் எப்போதும் ஒரு கடுகடுப்பு இருக்கும்.
தெருவில் ராசுக்கிளியை சந்திக்கிறபோது யாரும் அவனிடம் வீட்டுக்குவந்து
பிரம்புபின்னல் போடும்படி சொல்லிவிடமுடியாது.
தனக்குள்ளேயே கேள்விகளைக்கேட்டு தானே பதிலையும் சொல்லிக்கொண்டு
அவன்பாட்டுக்கு அவன் போய்க்கொண்டே இருப்பான்.
காலையில் எட்டுமணிக்குமுன் அவனுடைய குடிலுக்குப்போய் படலையைத்
தட்டினால் அது மெல்லத்திறக்கும்.அவன் எட்டிப்பார்ப்பான்.எந்தவீட்டில
எப்படியான தளபாடத்துக்கு பிரம்புப்பின்னல் போடவேண்டும் என்ற விபரம்
சொல்லும்வரை அவன் தலைதெரியும்.மீண்டும் பூட்டிக்கொள்ளும்.
அந்த வாரத்தில் ஒருநாள் வீட்டுக்கு அவன் ஆஜராவான்.அவனுடைய
வேலைக்கு வசதியான இடத்தை அவனே ஒழுங்குசெய்து உட்கார்ந்து
வேலையே குறியாக செயற்படுவான்.
நேர்த்தியாக வேலையைமுடித்து தனது எஞ்சிய பிரம்புகளை சுற்றி
எடுத்து மீண்டும் இடதுகைக்கு காப்புப்போல் போட்டுக்கொள்வான்.
வேலைமுடிந்தது என்று நாம் கண்டுகொள்ள இதுதான் சமிக்கை.
நாமாக அவன்முன்போய் எவ்வளவு என்று கேட்கவேண்டும்.அவன் ஒருகூலியை
சொல்லுவான். அதற்கு அதிகமாகக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளமாட்டான்.
குறைவாகக்கொடுத்தாலும் அந்த இடத்தைவிட்டு போகமாட்டான்.
நியாயமான அந்தக்கூலியை இலக்கத்தில் அவன் சொல்லுவதைதவிர வேறு
எதையும் அவன்பேசி நான் கேட்டதில்லை.
தண்ணீர் எடுப்பதற்குக்கூட ராசுக்கிளி வைரவர் கோயில் பக்கம் போனது
கிடையாது.பழைய லக்ஸ்பிறே தகரம் ஒன்றுக்கு கம்பியால் வளையம்போட்டு
வாளிபோல் செய்துவைத்துக்கொண்டு மயானத்துக் கிணத்துக்குத்தான் போவான்.
வைரவரோடு அவனுக்கு அப்படி என்னதான் கோபமோ!
இரண்டுமூன்று வருடத்துக்கு ராசுக்கிளியின் நடவடிக்கை ஒழுங்காக
இருக்கும்.திடீரென்று ஒரு வெள்ளிக்கிழமை வைரவர்கோயிலுக்குப் போன
வண்ணக்கர்.மயானத்தில் ராசுக்கிளி அவனுடைய தகப்பனாரின்
புதைகுழியில் படுத்திருப்பதாக வந்துசொல்லுவார்.சாப்பாடு தண்ணீர்
எதுவும் இன்றி வாயில் நுரைதள்ள கிடக்கும் அவனை ஆஸ்பத்திரி
அம்புலன்ஸிற்கு அறிவித்து அனுப்பிவைப்பார்.குறைந்தது மூன்றுமாதம்

ஆகும் அங்கோடை ஆஸ்பத்திரியிலிருந்து ராசுக்கிளி மீண்டும் கஞ்
குடிலுக்குத் திரும்ப.
ராசுக்கிளியைப்பற்றியே சொல்லிக்கொண்டுபோனால் எப்படி?
விஷயத்துக்கு வரவேண்டாமா?
விஷயத்துக்கு வரவேண்டுமானால் ஆத்தை அக்கையைப்பற்றியும் நீங்கள்
அறிந்துதான் ஆகவேண்டும். ஆத்தை அக்கையை நான் முதல்முதலில்
சந்தித்ததே ஒரு சுவாரசியமான சங்கதி.
எனக்கு திருமணமாகி என் மனைவியின் கிராமத்துக்கு நான் போயிருந்தேன்.
புதுமாப்பிள்ளை.பலத்த உபசரிப்புக்கள்.சின்னஞ்சிறிசுகள் எல்லாம்
என்னைச்சுற்றிச்சூழ்ந்துகொண்டு ஒரே கும்மாளம்.
கை இடுக்குக்குள் ஒரு துணிமுடிச்சுடன்.உரிமைகலந்த உரத்தகுரலில்
எதையோ கேட்டுக்கொண்டே வந்து வாசற்கதவடியில் கால்களைமடித்து
உட்கார்ந்தாள் ஆத்தை அக்கை.சிறிசுகள் எல்லாம் ஆத்தை அக்கைவந்திட்டாள்
என்று ஒரே கலவரம்.
முந்தானை தலைப்பை எடுத்து முகத்தில் வடிந்த வியர்வையைத்
துடைத்துக்கொண்டு கேட்டுவந்த தேவையைமறந்து ஊர்ப்புதினங்களை
சம்பந்தா சம்பந்தமில்லாது பொரிந்து தள்ளினாள்.தன்னைச்சுற்றி
இருப்பவர்களில்கூட அவள் அக்கறைசெலுத்தவில்லை.
திடீரென்று நினைவுக்கு வந்தவளாக ''என்னட்டை வெத்திலை கிடக்கு.
கொஞ்சம் சுண்ணாம்புதா பிள்ள'' என்றபடி துணிமூட்டைக்குள் கைகளை
நுழையவிட்டு நிமிர்ந்தாள்.
அப்பொழுதுதான் அவளுக்கு முற்றிலும் புதியமுகமான நான் அவள் கண்களில்
படலானேன்.அவசர அவசரமாக எழுந்து முந்தானையைச்சரிசெய்துகொண்டு
துணிமூட்டையை கைகளுக்குள் இடுக்கியவண்ணம் குசினிக்குள் ஓடினாள்
ஆத்தை அக்கை.ஓடும்போதுகூட அவளுடைய வாய் சும்மா இருக்கவில்லை.
''நெருப்புக்கொள்ளிய தண்ணிக்குள்ளை புதைச்சமாதிரி நிறமும் ஆளும்''
என்பது என் காதில் தெளிவாகக்கேட்டது.
ஆத்தை அக்கையின் இந்த வார்த்தைகள் என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தி
விடக்கூடாது என சிலபெண்குரல்கள் குசுகுசுத்து ஆத்தை அக்கையை
அமைதிப்படுத்த முனைவதில் நான் யார் என்று ஆத்தை அக்கைக்குத்
தெரிந்துபோக.''போயும்போயும் இந்த ஒவ்விதானா உனக்குக் கிடைச்சான்?''
என்றுசொல்லி பெருமூச்சுவிட்டாள் அவள்.
மாப்பிள்ளை முறுக்கில் இருந்த எனக்கு முகத்தில் அறைந்தாற்போல் இருந்தது.
ஆத்தை அக்கை இடைவிடாது ஏதோவெல்லாம் சொல்லிக்கொண்டேயிருந்தாள்.
கதைகள் என்னவோ தொடர்பில்லாமல் வேறுவேறு விஷயங்களுக்கு மாறிக்
கொண்டேயிருந்தன.
என்னைச்சுற்றி இருந்த சிறுவர்கூட்டம் என்காதில் ''கத்தியை எடு!'' என்று
சொல்லும்படி கட்டளையிட்டன.வேண்டின.இறுதியில் கெஞ்சின.ஏன் என்று
எனக்குப்புரியவேயில்லை.
இதில் ஏதோ ஒரு நையாண்டித்தனம் இருப்பதாகமட்டுமே நான் உணர்ந்தேன்.
சொன்னால் போச்சு என்ற முடிவுக்குவந்தவனாக ''கத்தியை எடு'' என்று
ஒரேயொருதடவை சத்தமாகச்சொல்லிவைத்தேன்.

ஆத்தை அக்கையின் அட்டகாசம் திடீர் என்று நின்றது.
அவள் எப்படித்தான் குசினிக்குள் இருந்து வாசலுக்குவந்தாள்? வாசலில் இருந்து தெருவுக்குப்போனாள்?! என்று நான் சிந்திக்கும் முன்னமே தெரு மூலையால் ஓடிமறைந்துபோனாள் அவள்.
நான் எதிர்பார்க்காத அந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டும் உணர்வுக்கு வருமுன் என்மனைவி என்முன்தோன்றி என்னைத்திட்டித்தீர்த்தாள்.
''ஆத்தை அக்கையை ஓட்டிக்கலைத்துவிட்டீர்களே!..பாவம் அவள். சமையலைப்பார்க்குவளை சாப்பிடவிடாமல் கலைத்துவிட்டீர்களே''
என்றாள்.என்னைச் சுற்றி இருந்த கூட்டம் குப்பென்று சிரித்துவிட்டு ஓடி மறைந்தது.காரணம் தெரியாமலே நான் மட்டும் வாங்கிக்கட்டினேன்.
என்னை கரிக்கட்டி என்று சொல்லாமல் சொன்ன ஆத்தை அக்கைமேல் என்மனைவிக்கு அப்படி என்ன அன்பு?
என் மனைவி எனக்கு சொன்ன ஆத்தை அக்கை புராணத்தையும் நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும்.
ஆத்தை அக்கை ஒரு அதிசயப் பிறவி.
மாதத்தில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டுபகுதி நாட்களை புத்தி சுவாதீனத்தோடும் மிகுதிநாட்களை சுவாதீனமற்றும் கழிக்கின்ற ஒரு இரட்டைவாழ்க்கைவாழும் ஜென்மம்.கறுப்பும் வெள்ளையும் போன்ற இரண்டு எதிர்மாறான வாழ்க்கைகள் அவை.
சுய உணர்வோடு அவள் இருக்கும்நாட்களில் ஒருநாளைக்கு அவள் இரண்டு தடவை குளிப்பாள்.தோய்த்துக்காய்ந்த சேலையைக்கட்டிக்கொண்டு உடுத்தி இருந்த சேலையை தோய்த்துப்போடுவாள்.மணக்கும் சவர்க்காரத்தை தேயத் தேய உரோய்த்துக் குளிப்பாள்.படுக்கப்போகும் இடத்தை பலதடவை கூட்டிச்சுத்தம்செய்வாள்.விடியமுன் எழுந்து பல்துலக்கி குளித்து பொட்டிட்டு அலங்கரித்து எங்காவது எடுபிடிவேலை செய்துகொடுத்து சம்பாதிக்க புறப்பட்டுவிடுவாள்.
எந்த ஆம்பிளையும் அவளிடம் வாலாட்ட முடியாது.
அப்படி ஒரு கண்டிப்பு அவளிடம் இருக்கும். கொஞ்சம் அதிகமாக அர்த்தமின்றி பசப்புவதைத்தவிர வேறொன்றும் குறையாக இருக்காது.
நிலவு பூரணை நிலவாகி வானத்தில் பவனிவர நான்கு ஐந்து நாட்களுக்குமுன்னரே ஆத்தை அக்கை துணிமூட்டைக்குள் மணச்சவர்க்காரம் உட்பட அவளுடைய உடமைகள் அனைத்தையும் வைத்து இறுக முடிச்சுப் போட்டுக்கொள்வாள்.
அடுத்த சிலநாட்கள் எப்படி அமையப்போகிறது என்பது அவளுக்கு எற்கனவே தெரிந்திருப்பதுதான் ஒருபெரிய அதிசயம்.
வானத்தில் நிலவு பால்போல ஒளிபாய்ப்பும் அந்தச் சிலநாட்கள்தான் ஆத்தை அக்கையின் இருண்டநாட்கள்.
அழுக்குத்துணியும் அதைவிட அசுத்தமான வார்த்தைப்பிரயோகமுமாக இரண்டாவது பிறவி எடுத்துவிடுவாள் ஆத்தை அக்கை.
சந்தைக்கடைகளின் ஓரம்,தெருக்களின் ஒதுக்குப்புறம் இப்படி எங்காவது ஒருமூலையில் தெருநாய்களைப்போல் படுத்து சுருண்டுவிடுவாள்.
இரவுபகல் என்றில்லாமல் சிலவேளைகளில் ஓயாமலாக நடக்கத்

தொடங்கிவிடுவாள்.''யாதும் ஊரே.......!''என்ற பழமொழி ஆக்கை அக்கைக்கு முற்றிலும் பொருந்தும்.ஊர்கள் கிராமங்கள் கடந்த நீண்ட பயணமாக அது அமையும்.


இந்தக்காலங்களில் இறுக முடிச்சுப்போட்டுக்கட்டிய துணிமூட்டையை அவள் எந்தக்காரணம்கொண்டும் அவிழ்க்கமாட்டாள். அவளுடைய கை இடுக்குக்குள் அது பத்திரமாகப் பயணம்செய்யும்.

மீண்டும் நிலவின் ஆக்கிரமிப்பு வானத்தில் குறையும் தேய்பிறைநாளில் ஆக்கை அக்கைக்கு சுயநினைவுவரும். அப்போது அவள் என்மனைவியின் சகோதரியின் வீட்டுக்கு வருவாள். நேரே கிணற்றடிக்குப்போவாள்.

பலதடவை மணச்சவர்க்காரம்போட்டு மணிக்கணக்கில் குளிப்பாள்.முற்றிலும் மாறான ஆக்கை அக்கையாக பிறவி எடுத்து வெளியே வருவாள்.

சுய உணர்வு அற்ற ஆக்கை அக்கை இருந்த நாட்களில் சாப்பிடக் கொடுத்து அவளுடைய வயிற்றை நிரப்பிய மனிதாபிமானம் நிறைந்த இந்தக் கிராமங்களிலேயே சாப்பாடுபோடாமலேயே வயிற்றை நிரப்பும் அயோக்கியர்களும் இருந்திருக்கிறார்கள்.

இப்படி கடந்த காலங்களில் மூன்று அழகான குழந்தைகளை



ஆத்தை அக்கை பெற்றிருக்கிறாள்.சுய உணர்வற்ற நாட்களில் பலவந்தமாக
மனைவியாக்கப்பட்ட அவள் அப்படியான நாட்களிலேயே தாயாகவும் ஆனாள்.
மாநிழல்களில் குட்டிபோடுவதுபோல் அவள்பெற்றுக்கொண்ட அந்தக்
குழந்தைகளை நல்லமனசுக்காரருக்கு தத்துக்கொடுக்கும்போது தன்னுடைய
இரட்டைவாழ்க்கையை எண்ணி அவள் கண்ணீர்விட்டிருக்கிறாள்.
அந்த குழந்தைகளுக்கு காரணமானவர்களை அவளுக்குத்தெரிந்துதான்
இருந்தது.

முதன்முதலாக அந்த அனுபவம் அவளுக்கு ஏற்பட்டபோது கத்தியைக்காட்டி
தன்னை உடன்படச்செய்த வெள்ளைமனிதரின் கறுப்பு வாழ்க்கையை வெளிப்
படுத்தினாள் அவள்.
அதன்பயனாக காலாலும் கையாலும் வாங்கிக்கொண்ட அடி உதைகளுக்கும்
இடையில் வளரும் குழந்தையை காப்பாற்ற இணுங்குபோல் சுருண்டுகொண்டாள்.
அந்தக்கோரமான நிகழ்ச்சிக்குப்பின் கத்தியைக்காட்டி அவளைப்பயமுறுத்தும்
தற்காலிகக் கணவன்மாரின் பெயர்களுக்கு நிரந்தர பாதுகாப்புக்கிடைத்தது.
''கத்தியை எடுத்துவா!'' என்று யார்சொன்னாலும் தலைதெறிக்க
ஆத்தை அக்கை ஓடுவதன் அர்த்தம் புரிந்தது எனக்கு.
எனக்கு வேலைமாற்றம் கிடைத்தது.
மூன்று வருடம் நான் ஊரில் இல்லை.மீண்டும் நான் ஊருக்குவந்தபோது
ஆத்தை அக்கையும் வீட்டுக்கு வந்திருந்தாள் முற்றிலும் மாற்றத்துடன்.
இப்போதெல்லாம் அவளுக்கு பயித்தியம் பிடிப்பதில்லையாம்!
பசப்புகின்ற ஆத்தை அக்கையாக அவள் இல்லை.கேள்விக்குமட்டும் பதிலைச்
சொல்லிக்கொண்டு அமைதியானாள்.என்னால் நம்பமுடியவில்லை.
கத்தி என்று சொன்னால் இப்போதெல்லாம் அவள் பயப்படுவதில்லையாம்.
அவளுடைய கழுத்தில் ஒரு மஞ்சள்கயிறு தெரிந்தது. தான் கல்யாணம்
செய்துகொண்டதாக சொல்லிக்கொள்ளுகிறாளாம்.
அசட்டல் ஆத்தை அக்கையா இவள்?
—நான் அதிசயித்துப்போனேன்.
அதைவிடப் பெரிய அதிர்ச்சி என்மனைவியின் சகோதரி சொன்ன தகவலில்
இருந்தது.ஆத்தை அக்கை தாலியை யாருக்கும் காட்டியதில்லையாம்.
அரிச்சந்திரனுக்குமட்டும்தான் சந்திரமதியின் தாலி தெரியும் என்று


**படைப்பாளர்கள் கவனத்திற்கு!**

பூவரசுக்கு ஆக்கங்களை அனுப்பும்போது
உங்கள் முழுப்பெயர்,முகவரி,இவைகளைக்குறிப்பிட்டு
அனுப்புங்கள்.பூவரசுக்கென அனுப்பும் ஆக்கங்களை
உடனடியாகப் பிரதிசெய்து வேறு பத்திரிகைகளுக்கு
அனுப்புவதைத்தவிருங்கள்.பூவரசு உங்கள் ஆக்கங்களுக்கு
ஆதரவு தரும் அதேசமயத்தில்,பூவரசைத்தரமானதாக்கும்
வகையில் உங்கள் தரமான ஆக்கங்கள் மூலம்
ஒத்துழைப்புத்தாருங்கள்.

சொல்லிக்கொள்வாளாம்.
ஆனால அவள் குளிக்கிறபோதும் பொட்டுவைத்து தாலியைக்கண்களில் ஒற்றிக்கொள்ளும்போதும் பார்க்கும் பாக்கியம் என்மனைவியின் சகோதரிக்குக் கிடைத்திருக்கிறது.
அது தாலியே இல்லையாம்!

ஒரு அரிவாகத்தியாக அதுவும் அடிமுனைந்து அரம்பகாரால இழுக்கட்டிய கூரான கத்தியாம்.
நான் அதிர்ந்தேன்.
ராகுக்கிளி திடீர் என்று என் ஞாபகத்துக்கு வந்தான்.
தொடராக வீரலிங்கம் வண்ணக்கர் கொலைசம்பந்தமான பத்திரிகை செய்திகளும் ஞாபகமாயின. அந்தக்கொலையில் கொஞ்சமும் சம்பந்தப்படாத ஆக்கை அக்கை அதற்குள் சங்கமமாகும் கற்பனையில் இருந்து என்னால விடுபடமுடியவில்லை.
ஒரு சைக்கிளை எடுத்துக்கொண்டு என் மனைவியின் கிராமத்தில் இருந்து என்னுடைய கிராமத்துக்கு விரைந்தேன். நேராக ராகுக்கிளியின் குடிலைச் சுட்டியைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தேன்.
அறையில் பழுப்பேறிய வெள்ளைச்சாறன் ஒன்றினால் மூடப்பட்டு ''உபயம் ராகுமுத்து'' என்று எழுதியுள்ள வாள்கிடந்தது.
காய்ந்துபோன இரத்தக்கறை இன்னமும் அதில் தெரிந்தது. பக்கத்திலேயே ஆக்கை அக்கை அடிக்கடி உபயோகிக்கும் மணச்சவர்க்காரக் கட்டி ஒன்றும் கிடந்தது.
வைரவர்கோயில் பக்கமே போகாத ராகுக்கிளியின் குடிசைக்குள் வைரவர்கோயில் வாள். கத்தியென்றாலே கத்திக்கொண்டுபோகும் ஆக்கை அக்கையின் கழுத்தில் கத்தி.
என்னால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. கைதிகள் காமிநீரக்குக்கு மாற்றப்பட்டிய செய்திகள் வந்தபோதுதான் நானும் என் மனைவியும் ஆக்கை அக்கையை அணுகினோம். உண்மையை மறைக்காமல் சொன்னால ராகுக்கிளிக்கு விடுதலை கிடைக்க வாய்ப்புண்டு என்பதை விளக்கினோம். ராகுக்கிளி என்ற பெயரைச்சொன்னதுமே அவள் அதிர்ந்து போனாள். அவள் கண்கள் குளமாயின.
உண்மை வெளியானது.
இரவுபகலாக இடைவிடாது நடந்து ஒரு வெள்ளிக்கிழமை விடியும் வேளை அவள் எனது கிராம மயானம்வரை வந்திருக்கிறாள் ஆக்கை அக்கை.
வைரவர்கோயில் வாளுடன் வழக்கம்போல்வந்த வீரலிங்க வண்ணருக்கு ஆக்கை அக்கையின் அலங்கோலம் சபலத்தை உண்டுபண்ணியிருக்கிறது.
ராகுக்கிளியின் தகப்பனார் ராகுமுத்துவின் புகைகுழியில் ஆக்கை அக்கையை அவர் மடக்கிப்பிடித்திருக்கிறார். ஆரவாரம் கேட்டு குடிலுக்கு வெளியே வந்த ராகுக்கிளி தனது கோயிலுக்கு சமமான புகைகுழியில் நடக்கும் கொடுமை ஆத்திரத்தை உண்டுபண்ணியிருக்கிறது.
தகப்பனார் விட்டுச்சென்ற அந்த உழைப்பின் சின்னமான கூரிய கத்தியை எடுத்துக்கொண்டு ஓடியிருக்கிறான்.

தாறுமாறாக வண்ணக்கரை கிழித்துவிட்டான்.அவனுக்குமுன்னமே வண்ணக்கர் கொண்டுவந்த வாளியைப் பறித்து ஆத்தை அக்கை வண்ணக்கரின் தலையில் அடித்து அவரது தலையாலும் இரத்தம் கசிந்திருந்தது.
ஆத்தை அக்கையை பார்த்தான் ராசுக்கிளி.தன்னைப்போல் ஒரு பிறவி என்பதைப் புரிந்துகொண்டான். கொலைக்குற்றம் ஆத்தை அக்கையை அணுகிவிடக்கூடாது என எண்ணிக்கொண்டான் போலும்.
இரத்தம் தோய்ந்த வாளியை எடுத்துக்கொண்டு குடிலைநோக்கி ஓடியவன் திரும்பிவந்து கொலையை தன்பக்கம் திருப்பும்முயற்சியாக தான உயிரிலும் மேலாக மதித்த அந்தக்கத்தியை பிணைத்துக்குப் பக்கத்திலேயே போட்டுவிட்டு சிதறிக்கிடந்த ஆத்தை அக்கையின் துணிமூட்டையைச் சரிசெய்து அவளிடம் நீட்டினான்.
ஏனோ அவள் அதனுள்வைத்திருந்த மணச்சவர்க்காரத்தைமட்டும் எடுத்துக்கொண்டு ஓடினான்
ஆத்தை அக்கைக்கு அந்தக் கத்தி அங்கேதான் கிடைத்தது.
அவன் பொலிசில் சரணடைந்தது பின்னர் பத்திரிகைச் செய்தியானது.
பல கத்திகள் ஆத்தை அக்கையின் கற்பை சூறையாடின.
கற்பைக் காப்பாற்றிய கத்தி தாலியாயிற்று.
இப்பொழுது சொல்லுங்கள்.ராசுக்கிளியின் குடிசைக்குள் அந்த இரண்டு புதுப் பிறவிகளும் அன்பாகக்குடும்பம் நடத்துவதை பார்க்க ஆசையில்லையா?
மனிதத்தை நேசிக்கும் ஒரு காலக்கட்டத்தில் தமிழீழப்பேருந்து பயணம் செய்யத்தொடங்கிவிட்டது.

*

## *நினைவுகள்.*

*நள்ளிரவு*
*நடைபாதையில் எச்சந்தடியுமில்லை*
*மரத்தடியொன்றில் அமர்ந்துகொள்கிறேன்.*
*நிலாமகள் கூட தன்*
*நினைவுகளை இழந்தாளா*
*நிலவாள் புன்னகைக்கின்றாள்*
*மெல்லிய காற்று*
*மெல்லென வீசியது*
*நிலா ஒளியில்*
*நினைவுகளைத்திருப்புகிறேன்*
*அந்த இளமைப்பருவம்*
*அந்தப்பசுமையான நாட்களை*
*நினைவில் கொள்கிறேன்*
*அந்தநாள் எனக்குத்தெரிந்திருந்தது*
*மகிழ்ச்சி என்றால் என்னவென்று*
*அந்த நினைவுகள் மீண்டும்*
*அவனும் நானும்*
*சந்தோஷத்தின் சங்கமத்தில்*
*சங்கமித்த நாட்கள்*
*நான் பேசும்போதெல்லாம்*
*அவனோ மௌனமாகி*
*அவன்பேசும்போதெல்லாம்*
*நானோ மௌனமாகி*
*இருவரும் பேசுகின்ற போது*
*பெற்றோர்கள்*
*மௌனம் ஆகாததால்*
*பிரிய மனமின்றி*
*பிரிந்தது இரு உள்ளங்கள்*
*அன்பை அலங்கரித்தது*
*அந்த உள்ளம்*
*அவனோடு நான் கொண்டது*
*அறியாத உறவு*
*அதனால் அந்த நாட்களை*
*நினைவில் கொள்கிறேன்*
*மீண்டும் ஓர் காலை*
*இரவிற்காக*
*நான் காத்திருக்கவேண்டும்*
*என் இனிய நினைவுகளை*
*நான் மறக்காமலிருக்க*
*இரவு வந்ததும்*
*மீண்டும் ஓர் நினைவு*
*மீளமுடியாத அவனது நினைவு.*

*—க.ஸ்ரீதாஸ்.*



(சென்ற இதழ் தொடர்ச்சி)

கைகளால் முகத்தை மூடிக்கொண்டு உடல் குலுங்க அழுதான் விஷ்ணு.
அழட்டும்...நன்றாக அழட்டும்...மனச்சுமை தீருமட்டும் அழட்டும்...!
–நான் காத்திருந்தேன்...
–மனம் அவனுக்காய் அழுதது...கூடவே எனக்காகவும் அழுதது.
என்ன இதெல்லாம்.. அர்த்தமில்லாத வாழ்க்கை..?ஒருநாள் சிரித்து
மறுநாள் அழுது...!எந்தக்கணத்தில் என்ன நடக்கும் என்று எந்த
முடிவுக்கும் வரமுடியாமல்...!கடவுள் என்று மேலே ஒருத்தன் தன்
கைகளில் நூல்களைப் பிடித்துவைத்துக்கொண்டு மனிதப் பொம்மைகளை
ஆட்டிக்கொண்டிருக்கிறான்.நிஜம்தானா...நிஜம்தானா?..
இருக்கும்...! இல்லாட்டில் மனிசரின்ர வாழ்க்கையிலை ஒன்டுக்கொன்டு
தொடர்பில்லாமல் இப்பிடி எல்லாம் நடக்காதே!
செல்விழுந்து சிதறிப்போன ஐயாவும்.
அந்த அதிர்ச்சியில் கண்ணுயிரை இழந்துவிட்ட அம்மாவும்.
வதைமுகாம்களில் சித்திரவதைகளை அனுபவிக்க நானும்..
இப்படிச்சில ஜீவன்கள் என் வாழ்வில்...!
அம்மாவை விட்டுவிட்டு ஓடிப்போன சுகப்பனும்.
அனாதையாய் தூரத்தில் செத்துப்போன அம்மாவும்.
உயிரோடிருந்தவரையில் கவனிக்காத அம்மாவின் உயிர் பிரிந்து போனபிறகு
கதறியழுகிற விஷ்ணுவும்...
இப்படியும் சில ஜீவன்கள் விஷ்ணுவின் வாழ்வில்...!
உலகத்தில் பிறந்த எல்லோரும் அவலப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
இந்த அவலங்களுக்கிடையே ஆனந்தத்தைத்தேடும் பயணம்தான் வாழ்க்கையா?
–இருக்கலாம்.
ஆனால் அந்த ஆனந்தத்தால் என்ன பலன்?
அதை அனுபவிப்பதற்கிடையில் மறுபடியும் ஒரு அவலம் வந்து வாசற்கதவைத்
தட்டுகிறதே!

"ஆரு...இண்டைக்கு நீர் வேலைக்குப்போகேல்லையா?"
–விஷ்ணுவின் கேள்வியில் நிமிர்ந்தேன்.
சில கணங்களுக்கு முன்பு விம்மி அழுதுகொண்டிருந்த விஷ்ணு இப்போது
மாறியிருந்தான்.
முகத்தில் கலக்கத்தைக் காணோம்.
ஈரம் பட்டிருந்த இமைகள்மட்டுமே அவன் அழுதிருக்கிறான் என்பதற்குச்
சாட்சி.மற்றும்படி அவன் அமைதியாகியிருந்தான்.
"எல்லாம் முடிஞ்சிட்டுது..இனி அதுகளுக்காய்க் கவலைப்பட்டு என்ன?"
–அவனே சொன்னான்...எனக்குச்சொல்வதுபோல் தனக்குத்தானே
சொல்லிக்கொண்டான்.

''இன்டைக்கு லீவு போடலாம் எண்டு பார்த்தன்!''
''ஏன்'?''
''உமக்காகத்தான் விஷ்ணு''
''வேணாம்...நீர் வேலைக்குப்போம்!''
''இன்டைக்கு எனக்கு லீவு... நான் ஒரு இடமும் போகேல்லை...இங்கைதான் இருப்பன்!''
நான் வேலைக்கு ஆயத்தமானேன்...
கதவுக் காமில் கைவைத்தபோது விஷ்ணு சொன்னான்:
''மறந்திடாதேயும்... அரசு...கிறப்பைக் கையில் எடுத்துக்கொண்டுபோம்!''
''இருக்குது!''என்று சொல்லி வெளியேவந்தேன்.

நாட்கள்மெதுவாய் நகர்ந்துகொண்டிருந்தன..
இலையுதிர்த்து நிர்வாணங்காட்டிய மரங்களெல்லாம் பச்சைமறைப்புக்களால் தங்களைப் போர்த்திக்கொண்டு சூரிய இளஞ்ஞை நோக்கி கிளைக்கரங்களை உயர்த்திக்கொண்டிருந்தன...வெய்யில் கரங்களால் மரங்களைத் தழுவி




இந்து மகேஷ்

மறுபடி இருளுக்குள் ஒடிமறைவதுமாய் சூரியன் நாட்களை விரட்டிக் கொண்டிருந்தான்.
வசந்தத்தில் மலர்கள் பூத்துச் சிரித்தபோது-
என் மனத்திலும் புதிதாய் ஒரு பூப்பூத்திருந்தது.
அந்தப்பூவின் பெயர்-
ஜஸ்மின்!
நான் வேலைசெய்யும் வேலைத்தலத்தில் புதிதாய் அறிமுகமாகியிருந்த துருக்கியப்பெண் அவள்.
அவளை அழகி என்று சொல்லமுடியாது.
அழகு என்பதற்கு எனக்குத்தெரிந்த இலக்கணங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்ட அழகு அது!
கண்,மூக்கு,வாய்,கழுத்து,மார்பு,கை,கால் என்று எதாவதொன்றை வர்ணித்தால் மற்ற அங்கங்கள் கோபப்பட்டுவிடுமோ என்று எண்ணவைக்கிற அளவுக்கு ஒன்றை ஒன்று மிஞ்சிநிற்கிற அழகு!
ஆரம்பத்தில் அவளது அழகு என்னைப் பாதிக்கவில்லை...
அந்த அழகுக்குப்பின்னால் அவளுக்குள் ஒளிந்துகொண்டிருந்த ஒரு எளிமை...
அதுதான் என்னை அவள்பால் ஈர்த்துக்கொண்டது.
-முதல்முறையாக அவள் சற்றுத்தூரத்தில்நின்று எனக்கு
''ஹலோ!'' சொன்னபோது அவள் எல்லாப் பெண்களையும்போல ஒரு சராசரிப்பெண்ணாகவே எனக்குத்தென்பட்டாள்.
ஆனால்,வேலைத்தலத்தில் -
அடுத்த சில வாரங்களுக்கெல்லாம் அவளும் நானும் நெருக்கமாய்நின்று பணியாற்ற நேர்ந்தபோது-
அவள் என்னையறியாமலேயே என்னுள் புகுந்துகொண்டாள்.
நான் யார்...? என் கதை என்ன?
-அவளுக்குத்தெரியாது!
அவள் யார்...? அவள் கதை என்ன?
-எனக்குத்தெரியாது!
எங்கள் இருவருக்குத் தெரிந்ததெல்லாம்-
நானும் அவளும் மனிதப்பிறவிகள் என்பதே.
ஆணும் பெண்ணுமாய் பிரிக்கப்பட்ட ஒரே ஆத்மா ஒன்றைத்தேடி ஒன்று அலைகிறதாம்...அதனால்தான் காதல் மலர்ந்து அவர்கள் ஒருவரில் ஒருவர் ஐக்கியப்பட்டுப்போகிறார்களாம்! என்று எங்கோ படித்த ஞாபகம்.
அது உண்மைதான் என்று அடித்துச்சொல்வதுபோல்-
என்னுள் புகுந்துகொண்ட ஜஸ்மின்!

''ஒருமுறைதான் காதல் வரும் தமிழர் பண்பாடு''
-கண்ணதாசன் கேள்வி எழுப்பி அவனே விடையையும் சொல்கிறான்:
''அந்த ஒன்று என்ன என்பதுதான் கேள்வி இப்போது!''
''காதலித்தார் பிரிந்துவிட்டார்...வாழ்வு என்னாகும்?''
''அன்பு காட்டுகின்ற வேளிடத்தில் காதல் உண்டாகும்!''

ஜஸ்மின் ஒருநாள் என்னிடம் கேட்டாள்.
''அர்ஸ்...நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா?''
அவளின் அந்தக்கேள்வியில் பவனாவை நினைத்தேன்.
பவனா இப்போது அமைதியாக வாழ்க்கை நடத்தவில்லையா?
பவனாவையே நான் நினைத்துக்கொண்டிருப்பது...அவளது நினைப்பினால்
மற்றவர்களிடமிருந்து நான் தூர விலகி நடப்பது என்ன நியாயம்?
–பதிலாய் எனக்குள் சில நியாயங்கள்...
சுயநலமோ?
இருக்கட்டுமே!
சுயநலம் கலக்காத பொதுநலம் எங்கிருக்கிறது?

''உன்னைக் கல்யானம் பண்ணிக்கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும்
இல்லை...ஆனால் ஆட்சேபணை உன் குடும்பத்தில்தான்!''
''குடும்பமா..? எனக்கா?''
–அவளது கேள்வியில் விரக்தி தெரிந்தது.
''என்ன ஜஸ்மின்?''
''எனக்கு அப்பா இல்லை...அம்மா நோயாளி...தம்பி ஒருத்தன்...சொல்லுக்கு
அடங்காதவன்...ஆனாலும் என்மேல் நிறையப்பாசம்...அவனுக்கு சகவாசம்
சரியில்லை...இப்போது குறைத்துக்கொண்டு வருகிறான்...இரண்டாவது
உலகப்போர் முடிந்த கையோடு இளைஞனாய் என் அப்பா இந்த நாட்டுக்கு
வந்தார்...இந்நாட்டைச் செழிப்பாக்கிய தொழிலாளவர்க்கத்தில் என்
அப்பாவுக்கும் பங்குண்டு என்று அம்மா சொல்வாள்...இந்த நாட்டில் பிறந்தவள்
நான்...என்றாலும் நான் ஜெர்மன்காரியாகிவிடவில்லை...அப்படி ஆவதில்
எனக்கு விருப்பமும் இல்லை!''
–அவள் சொல்லிக்கொண்டே போனாள்.
''சரி...அடுத்த பிரச்சனை மதம்!'' என்றேன்.
''மதம்?''
–அவள் சிரித்தாள்.
தன் கையில் வைத்திருந்த இனிப்புப் பொட்டலத்திலிருந்து இனிப்புத்
துண்டொன்றை எடுத்து என் வாயைத்திறக்கச்சொல்லி என் நாவில் இட்டாள்.
''எப்படி இருக்கிறது அர்ஸ்?''
''என்ன கேட்டாய்?''
''இனிப்பு எப்படி இருக்கிறது என்று கேட்டேன்!''
''இனிக்கிறது!''
அவள் தன் வாயிலும் ஒரு இனிப்பைப் போட்டுக்கொண்டாள்.
''எனக்கும் இனிக்கிறதே!'' என்றாள்.
வழியில் குறுக்கிட்ட ஒருவனிடம் அவள் ஒரு இனிப்பை நீட்டினாள்.
''வேண்டாம்..நன்றி!'' என்று நடந்தான் அவன்.
ஜஸ்மின் என்னைப்பார்த்துச் சிரித்தாள்.
''இதுதான் மதம்!'' என்றாள்.
''நாங்கள் ருசிக்கிறோம்...அவனுக்குப் பிடிக்கவில்லை...ருசிக்கிற எங்கள்
நாக்குகள் வேறு வேறு...ஆனால் இனிப்பதை நாங்கள் இரண்டுபேருமே

உணர்கிறோமே...இதை நாங்கள் ஒருத்தருக்கொருத்தர் விட்டுக்கொண்டால் போதும்...நீங்கள் உண்பதை நானும் நான் உண்பதை நீங்களும் உண்ண வேண்டும் என்று கட்டாயப்படுத்தத் தேவையில்லை...!''
—நான் ஆச்சரியமாகியிருந்தேன்.
சின்னவயசில் அவள் தெளிவாகியிருந்தாள்.
அழகு அவள் உடலில் மட்டுமல்ல...மனத்திலும் அதிகமாகவே நிரம்பிக் கிடந்தது.

''ஒரு பெண்ணை முழுமையாய்ப் பராமரிக்கிற ஆணும் ஒரு ஆணை முழுதுமாய் நிர்வகிக்கிற பெண்ணும் இணைந்தால் அந்த இரண்டு ஜீவன்களுமே வாழ்க்கையில் முழுமைபெற்றுவிடும்...அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது...அர்ஸ்!''
''நாங்கள் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம்!'' என்றேன் நான்.
''ஆனால் ஜஸ்மின்...ஒருகாலம் நான் என் நாட்டுக்குத் திரும்பிவிடுவேன்...
நீ என்னுடன் வந்தாகவேண்டும்!''
''வராமல்...?''
—அவள் கேள்வியிலேயே பதிலைத் தந்தாள்.

விஷ்ணுவிடம் ஒருநாள் விஷயத்தைச்சொன்னபோது அவன் புன்னகைத்தான்.
''ஏதோ ஒருவகையிலை எல்லா மனிசருக்கும் வாழ்க்கையிலை ஒரு பற்றுதல் இருக்கவேணும்...உமக்கு இப்ப துருக்கிக்காரியாய் வந்திருக்குது!...
அதுக்கென்ன..நல்ல பெட்டை என்கிறீர்...கட்டிக்கொள்ளுமன்!...வாழ்த்துக்கள்!

திருமணத்துக்கு நாள் குறித்தாயிற்று!
இன்னும் ஒருவாரம்தான்...
நகரத்துக்குள் திடீரென ஒரு பதட்டநிலை வந்தது.
அறைக்குள் இருந்து தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த விஷ்ணு திடீரெனப் பதறி எழுந்தான்...
''எட....அநியாயப்படுவாங்களே!''
அப்போதுதான் வேலைத்தலத்திலிருந்து திரும்பியிருந்த நான் விஷ்ணுவின் பக்கம் திரும்பினேன்—
தொலைக்காட்சித் திரையில் நெருப்புக் கொழுந்துவிட்டெரிந்தது....
''என்ன விஷ்ணு எங்கேயாவது விபத்தா?''

''எங்கேயும் இல்லை...எங்கடை ஸ்டாட்டிலைதான்!..நாலைந்து வீடுகளைக் கொழுத்திப்போட்டாங்கள்!..எட்டுத்துருக்கியர் எரிந்து சாம்பலாகிப் போச்சுதுகள்!''
—மனம் பதைத்தது.
—ஏதோ என் இனத்துக்கே இழப்பு வந்துவிட்டாற்போல்!
தீயணைப்புப்படையும்,அம்புலன்சும்,போலீஸ்காரர்களும்,வேன்களுமாய்...
வீதி பரபரப்பாவதைத் திரும்பிப்பார்த்தவன் அதிர்ந்தேன்.
அது—

ஜஸ்மின் குடியிருந்த வீடு!
"ஜஸ்மின்!"
பதட்டமாய் ஓடி,தொலைபேசியை எடுத்தேன்.
தொடர்பில்லை!
"விஷ்ணு!..என் ஜஸ்மினுக்கு ஏதோ!"
வேகமாய் வீதிக்குவந்து-
டாக்சியில் ஏறி-
கீப்பிடித்த தெருவுக்கு வந்தபோது-
கருகிப்போன என் ஜஸ்மினின் உடலை வேனில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.
முகத்தைக் கைகளால் அறைந்து-
"ஜஸ்மின்!" என்று அலறி, வேனை நோக்கி ஓடிய என்னை பொலிஸார்
தடுத்துக்கொண்டார்கள்.
ஜஸ்மினை ஏற்றிய வேன் மறுபுறமாய்த் திரும்புகையில்-
அதன் விளக்கொளிபட்டு-
விளம்பரத்தூணில் ஒட்டப்பட்டிருந்த பெரியதொரு வாசகம்
என்னை எரித்தது.
"அவுஸ்லாண்டர் றவுஸ்!"
வெளிநாட்டவனே வெளியேறு!
என் நெஞ்சுக்குள் பதிகாய்ப் பாவிய தீயில்-
என் சொந்த மண்ணின் துயரங்களும்.....

(முற்றும்)

## ஒற்றுமைக்காய் பாடுகிறேன்!

தமிழினமே விழித்துவிடு
உன் தலைவிதியை மாற்றிவிடு
தனிநாட்டை வென்றுவிடு
தனித்தனி வாழ்வதை மறந்துவிடு!

நீலக்கடல் அலைகள் எல்லாம்
இரத்தநிறம் ஆகியதேன்?
அலைகடலின் பாஷை எல்லாம்
அழுகுரலாய் ஆகியதேன்?
அண்டைநாடும் அந்நியனும்
அள்ளித்தந்த பரிசுகளோ?
நாம் ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தால்
இவர்களின் கை ஓங்கிடுமோ?

படித்தபாடம் போதுமடா
பண்புவேலி வேண்டுமடா
உறவை மதிக்க மறந்துவிட்டால்
உலகம் விழுந்து சிரிக்குமடா!
தமிழ் உணர்வை மிதித்துவிட்டு
பகைமை வெளியில் பயணம்சென்றால்
பிரிவு மீண்டும் தோன்றுமடா
பிரிந்துகொண்டே போகுமடா!

-செ.யோகநாதன்,

# அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!

பூவரசு என்னும் இந்த இனிய தமிழேட்டின் வளர்ச்சியி
நீங்கள் காட்டும் ஆர்வம் தமிழ் இலக்கியப்பரப்பை
மேலும் செழுமைப்படுத்த உதவுவதோடு,
நமது மண்ணின் மைந்தர்களின் ஆக்கபூர்வமான
இலக்கியமுயற்சிகளுக்கு ஆதாரவு தருவதாகவும்
அமைகிறது.
பூவரசு பொருளாதாரச்சிக்கலில் வாடிவிடாமல்
காக்கும் பணி வாசகர்களாகிய தங்களுடையதே.
பூவரசுபற்றிய உங்களது கருத்துக்களையும்
மனந்திறந்து எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

பூவரசுக்கான உங்கள் சந்தாவை
காசுக்கட்டளையாக அல்லது காசோலையாக
நீங்கள் அனுப்பிவைக்கலாம்.
பின்வரும் விண்ணப்பத்தையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்:

---

ஆண்டுச்சந்தா:
30 DM (தபாற்செலவுடன்)

பூவரசு
இனிய தமிழ் ஏடு

வாசகர் பெயர்:......................................

முகவரி:...............................................
.............................................
.............................................
.............................................
.............................................

பூவரசு இனிய தமிழ் எட்டைத் தொடர்ந்துபெற விரும்புகிறேன்.
அதன் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில்
எனது அன்பளிப்பாக ஒரு வருடச் சந்தாவை இத்துடன்
(காசுக்கட்டளையாக/காசோலையாக) இணைத்துள்ளேன்.

அன்புடன்,

(கையொப்பம்)

.............
(திகதி)

பிறேமன் தமிழ்க்கலை மன்றம்
TAMILISCHER KULTUR VEREIN BREMEN e.V.

மேன்மையொடு நாம் ஒற்றுமையாய்
மேலைநாட்டினிலும் கலை வளர்ப்போம்

# பிறேமன் தமிழ்க்கலைமன்றம் வழங்கும் சித்திரைக் கலைவிழா!

காலம்: 16.04.1993 பிற்பகல் 4 மணி.
இடம்: HAUS IM PARK மண்டபம்.

நிகழ்ச்சிகள்:
தமிழிசை
நாட்டியம்
மெல்லிசை
நாடகம்

தொடர்புகளுக்கு:

**Frau J.Felix**
**Schriftführerin**
**Tamilischer Kultur Verein e.V.**
**Tessiner Str 10**
**2800 Bremen 41**
**Germany.**




2வது ஆண்டுநிறைவுக்

# கலை இலக்கிய
# பரிசளிப்பு விழா!